DEEPAM
.news

தீபம்

கனடாப் பதிப்பு

தமிழின் முதல்தர
• வார இதழ் • தீபம் 5 • 30.12.2015











‘சிங்க லே’ இயக்கம்: சிங்கள பேரினவாதத்தின் புதிய எழுச்சி

இலங்கையில் சிங்கள தேசியவாதத்தின் போக்கு இன வெறுப்பின் வெளிப்பாடாக அமையக் கூடாது என்ற எண்ணம் புதிய அரசாங்கத்தின் வருகையோடொட்டி பெரிதாக பேசப்பட்ட போதும் அது தனது பேரினவாதப் போக்கை புதிய வடிவில்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

ஒளிச்சுடரில் உயிர் வாழ்வு!!

அன்பான தீபம் வாசகர்களுக்கு எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.! மலரப்போகும் புத்தாண்டு உங்கள் அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தருவதாக அமையட்டும்!

கடந்து போகும் 2015 ஆம் ஆண்டின் இறுதிக் கட்டத்தில் தீபம் ஐந்து இதழ்களுடன் உங்களை சந்தித்திருக்கிறோம். இந்த ஐந்து இதழ்களுக்கும் நீங்கள் வழங்கிய ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு வரப்போகும் புத்தாண்டிலும் உங்கள் ஆதரவு எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் எமது பணியை தொடரவுள்ளோம்.

தீபம் இதழ் வாரந்தோறும் புதன் கிழமைகளில் உங்கள் கைகளில் கிடைப்பதற்கு எமது முயற்சிக்கான காரணங்களையும் எமது நோக்கங்களையும் இந்தக் கட்டத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விளைகிறோம்.

கனடாவில் எத்தனையோ தமிழ் பத்திரிகைகள் இருக்கத்தக் கதாக ஏன் இன்னொரு பத்திரிகை? என்ற கேள்விக்கான பதிலே தீபத்தின் வருகைக்கான காரணமாகும்.

ஆம், பத்திரிகை என்றால் என்ன? சமூகத்தில் அதன் கடப்பாடுகள் என்ன? மொழியின் மேம்பாட்டிலும் அரசியல் சமூக பொருளாதார மற்றும் கலை பண்பாட்டுத் துறைகளில் அறிவும் ஆழமும் சேர்ந்தவகையில் ஒரு பத்திரிகைக்கு இருக்கக்கூடிய பொறுப்புக்களும் கடமைகளும் என்ன? என்பதை முழுமையாகப் புரிந்துகொண்டு செயற்படும் நோக்கத்துடன் தீபம் வெளிவரத் துவங்கியுள்ளது.

கனடாவிலும், புலம்பெயர் தேசங்களிலும் மதிப்பும் நம்பகத்தன்மையும், சுயமும் சுயாதீனமும் அறமும் கொண்ட தமிழ் ஊடகத்துறை ஒன்றின் அவசியம் வெகுவாக உணரப்பட்டதன் விளைவே தீபத்தின் ஆரம்பத்திற்கான பிரதான காரணம். பிழையற்ற எளிமையான நல்ல தமிழில் அறிவும் தகவலும் உண்மைகளும் பரவ வேண்டும் என்பதை தனது பிரதான நோக்கமாக கொண்டுள்ளது தீபம்.

எல்லாவிதமான அடக்குமுறைகளுக்கும் எதிராகவும் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் தீபம் உறுதியாக செயற்படும். முழுமையான கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை உயர்த்திப் பிடிக்கவும் அரசியல் கட்சிசார் நிலைப்பாடுகளைச் சாராது ஒடுக்கப் பட்ட மக்களின் நலன்களை அடிப்படையாக கொண்டு செயற்படுவதிலும் அது எப்போதும் உறுதியாக நிற்கும்.

தமிழ் ஒரு இனிய மொழி, ஆற்றலும் வளமும் கொண்ட வாழும் மொழி என்று திரும்பத்திரும்ப சொல்லிக்கொண்டாலும் எம்மிடையே அதைப் பற்றிய கவனம் மிகவும் குறைவாகவே உள்ளது. இன்றைய தமிழ்க் கொலைக்குத் தமிழ் ஊடகங்களும் பெரிய பங்களிப்பைச் செய்கின்றன என்பது எல்லோராலும் உணரப்படுகிற அவலம்.

தமிழ் மொழி பற்றி மகாத்மா காந்தி ஓர்முறை இப்படி எழுதினார்: '

தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடியபோது அங்கிருந்த தமிழர்களின் ஒத்துழைப்பால் மனம் நெகிழ்ந்த மகாத்மா காந்தி தமிழ் படிக்கத் துவங்கினார். 1908 இல் அங்குள்ள ஒரு பத்திரிகையில் அவர் இவ்வாறு எழுதுகிறார்:

சென்ற மாதம் அவர்களுடைய பாசையை (தமிழை) கவனமாகப் படித்து வந்தேன். அதைப் படிக்கப் படிக்க அதன் அழகு அதிகமாகத் தெரிகிறது. அது நேர்த்தியானதும் அமிர்தம் போன்றதுமான பாசை. நான் படிப்பதிலிருந்து எனக்குத் தெரிவது என்னவென்றால், தமிழர்கள் மத்தியில் பூர்வகாலத்திலும் இப்போதும் அநேக புத்திமான்களும் ஞானன்களும் இருந்திருக்கிறார்கள்."

மகாத்மா காந்தியின் இந்த உணர்வையும் அழகையும் நமது ஊடகங்களில் காண்பது அரிதிலும் அரிதாகிக் கொண்டு வருகிறது.

தீபம் தமிழுக்கும் தமிழ் மக்களின் வாழ்வுக்கும் உலகெங்கும் வாழும் ஒடுக்கப் படும் மக்களின் வாழ்வுக்கும் ஒளியூட்டும் உலகளாவிய முயற்சியில் கூட்டாக முன்னணியில் நின்று செயற்படும். ஒளிச் சுடரில்தான் உயிர் வாழ்வு!

மக்கள் நலன், மொழி நலன், ஊடக நலன் இவைதான் எமது தாரகம் !

மீண்டும் அடுத்ததடவை புத்தாண்டில் சந்திப்போம்!

Deepam Canada
3-2094 Lawrence Ave.E
Toronto on M1R 2Z6 Canada
416.240.9727
info@deepam.news www.deepam.news



செய்யாத குற்றத்தை ஒப்புக்கொள்ள விரும்பும் கைதிகள்!

“முடிவில்லாதுஇழுபட்டுச்செல்லும்வழக்குகளும், காலவரையற்று வடக்குக் கிழக்கை சேர்ந்த அரசியல் கைதிகள் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருத்தல் தான், கைதிகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் மத்தியில் நிலவும் பதட்டமும் துயரமும் நிறைந்த வாழ்வுக்கு பெரும்பாலும் காரணமாக அமைந்துள்ளது. பெரும்பாலான குடும்பங்களின் வருமானத்தை ஈட்டுபவர்கள் இவர்களே என்பதால் இந்தக் குடும்பங்கள் மிகுந்த பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். இந்தச் சிறைக் கைதிகளாலும் அவர்களது அன்புக்குரியவர்களாலும் திரும்பத்திரும்ப நடாத்தப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட்டங் களும், அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக் கைகளும் எமக்கு மிகுந்த மனவருத்தத்துக்கு உள்ளாக்கு வதாக அமைந்துள்ளன."

இவ்வாறு தெரிவிக்கிறது, யாழ்கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை மங்களராஜா அவர்களால் கையெழுத் திடப்பட்டு, ஆணைக்குழு சார்பாக கடந்தவாரம் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று.

“தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருக்கும் கைதிகள் தொடர்பாக நாம் ஓரளவு விபரமான தகவல்களைத் திரட்டியுள்ளோம். அவற்றின் அடிப்படையில் அண்மையில் விடுவிக்கப்பட்ட கைதிகளை விட இன்னும் ஏறக்குறைய இருநூறு கைதிகள் வரை தடுப்புக் காவலில் விசாரணை இன்றி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியவந்துள்ளது. ” எனத் தெரிவிக்கும் அந்த அறிக்கை மொத்தம் 176 கைதிகளில் இன்னமும் 95 பேர் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்திருக்கப் பகிறார்கள் என்றும் மொத்தக் கைதிகளில் 50 பேர் பத்து முதல் பதினைந்து வருடங்கள் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் 45 பேர் எட்டுமுதல் பத்து வருடங்களாக சிறையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கிறது. மேலும் பலர் தகுந்த ஆதாரங்கள் இல்லாததால் அவர்கள் மீது எந்தக் குற்றப் பத்திரிகையும் முன்வைக்கப் படாமலே நீண்ட காலமாக சிறையில் வைக்கப் பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது. இந்த நிலை அவர்களில் பலரை தாம் செய்யாத குற்றத்தை செய்ததாக ஒப்புக்கொள்வதன் மூலமாகவேனும் விசாரிக்கப் பட்டு தண்டனையை பெற்று விரைவில் விடுதலை பெற்றுவிடலாம் என்று நம்பி அந்த வகையிலாவது விடுதலை பெற முயலவைத்துள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. சமாதானத்துக்கும் இனங்களுக் கிடையிலான உறவின் மீளுருவாக்கத்துக்கும் அவசிய மான பாதையில்பயணிப்பதற்குஇந்தஅரசியல்கைதிகள் முடிந்தளவு விரைவாக விடுவிக்கப் படுவதற்கான செயற் பாடுகள், நல்லெண்ண அடிப்படையில் எடுக்கப் படுவது மிகவும் காலப் பொருத்தமான ஒரு நடவடிக் கையாகும்என அந்த அறிக்கைமேலும்குறிப்பிட்டுள்ளது.



மருத்துவ மனைகள் மீதான தாக்குதல்கள்!

ஒக்டோபர் மாதம் ஆஃப்கானிஸ்தானிலுள்ள குண்டூஸ் என்னும் கிராமத்தில் எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு நடத்திவந்த மருத்துவமனை மீது அமெரிக்கப் படையினர் குண்டு வீசியதில் நோயாளிகள், மருத்துவர்கள் உட்பட 42 பேர் கொல்லப்பட்டமை தெரிந்ததே. இது போர்க்குற்றம் எனவும் இதனை விசாரிக்க ஒரு சர்வதேச விசா ரணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என எல்லை களற்ற மருத்துவர்கள் அமைப்பும் மனித உரிமைகள் கண்காணிப்பகமும் மீண்டும் வலியுறுத்தியுள்ளன. குண்டு வீச்சு தவறுதலாகவே நடந்தத்து எனவும் மன்னிப்புக் கேட்பதாகவும் அமெரிக்க அரசு தெரிவித் தாலும் இத் தாக்குதல் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது எனவும் குண்டூஸில் இயங்கி வந்தது மருத்துவமனை என்பது ஏற்கெனவே அமெரிக்கப் படையினருக்குப் பல முறை உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது எனவும் எல்லைகளற்ற மருத்துவர் அமைப்புத் தெரிவிக்கிறது.

போரில் மருத்துவமனைகளைத் தாக்குவது போர்க் குற்றம் எனத் தெரிந்தாலும் அது பரவலாக இடம் பெற்று வருகிறது.

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் மட்டும் சிரியாவில் பதினைந்து மருத்துவமனைகள் விமானக் குண்டு வீச்சில் அழிந்துள்ளன. மனித உரிமைகளுக்கான மருத்துவர்கள் அமைப்பு (Physicians for Human Rights) இந்த வாரம் வெளியிட்ட அறிக்கையின்படி சிரியாவில் மருத்துவமனைகள் மீது இதுவரை 336 தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. 240 மருத்துவமனைகள் அழிக்கப் பட்டோ அல்லது பாதிக்கப்பட்டோ உள்ளன. 697 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த விமானத் தாக்குதல்களுக்கு அமெரிக்கா, ரஷ்யா, ஜேர்மனி, பஷார் அசாத்தின் சிரிய அரசாங்கம் என்பனவே முதன்மைப் பொறுப்பை யாரையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை!



ஓ! கனடா...

விலகி இருப்பதே உன்னதம்!

சீமோர் ர் ஹேர்ஷ் (Seymour Hersh) ஒரு புகழ் பெற்ற அமெரிக்க ஊடகவியலாளர். புலனாய்வு ஊடகத்துறை (Investigative Journalism) என வழங்கப்படும் ஊடகவியலின் முக்கியமான ஒரு ஆய்வுப்பரப்பில் மிகவும்சிறப்பான பங்களிப்புகளை வழங்கி வருபவர். புலிட்சர் பரிசை இதழியலுக்காக வென்றவர். வியட்னாம் போரின் போது அமெரிக்கப் படைகள் பல நூற்றுக் கணக்கான பொதுமக்களையும் குழந்தைகளையும் மை லாய் என்ற ஊரில் கொன்று குவித்தார்கள். அதனை ஆதாரங்களோடு 1968 இல் அம்பலப்படுத்தியவர் சீமோர் ஹேர்ஷ். மைலாய் படுகொலையை ஹேர்ஷ் வெளிக்கொண்டு வந்ததமையே வியட்னாம்போர் தொடர்பாக அமெரிக்க மக்களின் எண்ணங்களில் பாரிய மார்றத்தை ஏற்படுத்தியதாகப்பலர் எழுதியுள்ளனர்.


ஈராக்மீதான அமெரிக்கப் படையெடுப்பின் ஒரு விளைவாக அபுக்ரேயிப் சிறைகளில் அமெரிக்கப் படையினர் ஈராக் கைதிகளைக் கோரமாகச் சித்திரவதை தொடர்பான படங்கள் 2004 இல் வெளிவந்தமை பலருக்கு நினைவிருக்கலாம் அபுக்ரேய்ப் அநியாயங்களை அம்பலப்படுத்தியவரும் சீமோர் ஹேர்ஷ்தான். இந்த ஆண்டு மே மாதம் பின் லாடன் கொலை தொடர்பாக அமெர்க்க அரசு வெளியிட்ட தகவல்களின் பொய்மையையும் அவர் அம்பலப்படுத்தினார். சென்ற வாரம் வெளியாகியுள்ள London Review of Books இதழில் அவர் இன்னுமொரு அம்பலப்படுத்தலையும் செய்துள்ளார். அரிக்காவின் பலம் வாய்ந்த முப்படைகளின் தளபதிகள், அதிபர் ஒபாமவுக்கும் வெள்ளை மாளிகை அதிகாரிகளுக்கும் தெரியாமல் சிரியத் தலைவர் பஷார் அசாத்துக்குமறைமுகமாகத்தகவல்களை வழங்கி வந்திருக்கிறார்கள் எனபதே அது. இந்தத் தகவல்கள் ஜேர்மனி, ரஷ்யா, இஸ்ரேல் அரசுகளுக்கூடாக அசாத்துக்கு வழங்கப்பட்டன என சீமோர் ஹேர்ஷ் எழுதுகிறார். சவுதி அரேபியா, துருக்கி ஆகிய அரசுகள் இஸ்லாமிய அரசுக்கு (ISIS) ரகசியமாக ஆதரவு வழங்குவது தெரிந்தும் ஒபாமாவும் வெள்ளை மாளிகை அதிகாரிகளும் அதனை விமரிசிக்கவோ அல்லது எதிர்க்கவோ தயாராக இருக்கவில்லை என்பதனால் ஏற்பட்ட கோபமே இந்த ரகசியத் தகவல் பரிமாற்றத்துக்குக் காரணம் என சீமோர் ஹேர்ஷ் கூறுகிறார். அரசியல் தலைவர்களதும் ஆட்சியாளர்களதும் கட்டுப்பாடுகளுக்கு வெளியே ரகசியமானமுறையில் அமெரிக்க ராணுவத்தினர் மற்றைய நாடுகளின் ராணுவங்களுடன் உறவு வைத்திருப்பது அவ்வளவு ரகசியமானதல்ல (Military to Military). இலங்கை,இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் இராணுவத்துக்கும் அரசியலுக்கு அப்பாலான தொடர்பு அமெரிக்க இராணுவத்துடன் இருப்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல. இத்தகைய உறவுகளில் ராணுவத்தினருக்குக் கணிசமான அளவு "சுய நிர்ணய உரிமை" உள்ளது. இவ் வழிமுறையின் மூலமே அசாத்துக்குத் தகவல்கள் வழங்கப்பட்டன.

இது அம்பலப்படுத்தப்பட்ட பிறகு அசாத் பதவி விலக வேண்டும்என்னும்கோரிக்கையை அமெரிக்கா இப்போது வலியுறுத்துவதில்லை. சிரிய யுத்தம் தொடர்பாக இப்பொழுது எட்டப்பட்டிருக்கும் சமாதான உடன்பாட்டிலும் அசாத்தின் எதிர்காலம் பற்றிய எந்தக் கதையும் இல்லை! கனடா இந்தச் சிக்கலில் இருந்து விலகி இருப்பதே உன்னதம்.

இலங்கையை நினைவுக்குக் கொண்டுவரும் கெபேக்!

ஹிற்ச் ரிஃப்லாட்டி (Hitch Tiflati) ஒரு ஆய்வாளர். இஸ்லாம் மதம், மதம் சார்ந்த துறைகளில் புலமையாளர். கெபெக் மா நிலத்தின் மொன்றியால் நகரில் அண்மையில் நிறுவப்பட்ட Anti-Radicalization Centre (தீவிரவாதம் உருவாகுவதற்கெதிரான ஆய்வு நிலையம்) எனும் அ

மைப்பில் புலமையாளராகவும் ஆய்வாளராகவும் பணிபுரிந்து வந்தார். Toronto Star நாளிதழில் கெபெக் மாநிலத்தில் விரவியிருக்கும் இஸ்லாமிய வெறுப்பு பற்றிய கட்டுரையொன்றை ஆய்வாளர் அமர்நாத் அமரசிங்கத்துடன் இணைந்து எழுதியிருந்தார். அந்தக் கட்டுரை கெபெக் (Quebec) மாகாணத்துக்கு எதிரானதெனக் குற்றம் சாட்டி ஆய்வாளர் ஹிற்ச் ரிஃப்லாட்டியை பணி நீக்கம் செய்து விட்டது Ant-radicalization Centre.!



இஸ்லாமிய வெறுப்பு பல ஆண்டுகளாகவே வட அமெரிக்காவிலும் ஐரோப்பவிலும் பெருகி வந்தாலும் கனடாவின் கெபெக் மாகாணத்தில் ஒரு "தனித்துவமான" இஸ்லாமிய வெறுப்பு நிலவுகிறது என்பதே ஆய்வாளர்கள் அமர் நாத் அமரசிங்கம், ஹிற்ச் ரிஃப்லாட்டி ஆகியோரின் கருத்தாகும். இந்தக் கருத்தை வேறு பல ஆய்வாளர்களும் பல்வேறு கருத்துக் கணிப்புக்களும் வழிமொழிகின்றன. ஐம்பது வீதமான கெபெக் மக்கள் இஸ்லாத்துக்கும் இஸ்லாமிய உடையான "அபாயா' விற்கும் எதிரானவர்கள் எனக் கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவிகிறது. கெபெக்கின் சிலநகரசபைகள் அங்கு முஸ்லிம்கள் வசிக்காத போதும் ஷரியாச் சட்டத்துக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர் என்பது ஒரு சின்ன உதாரணம். முகத்தையோ தலையையோ மூடி ஆடை அணிபவர்களுக்கு கெபெக் மாகாண அரசில் வேலை கிடையாது என்பது அங்கு சட்டம். கனடாவின் ஏனைய மாகாணங்களைப் போலன்றி பிரஞ்சுமொழியும் கத்தோலிக்கமும் பெரும் ஆதிக்கம் பெற்று விளங்கும் ஒரு மாகாணம் என்ற வகையில் கெபெக் மாகாணம் எப்போதும் தனித்துவத்தையும் தனி நாட்டையும் கோரி வருகிறது. பிரிந்து போவதற்காக இரு முறை சர்வசன வாக்கெடுப்பு நிகழ்ந்தும் கெபெக் வெற்றி பெறவில்லை. எனினும் கெபெக் தேசியம் மிகவும் வலுமிக்க சக்தியாகவே கனடாவின் அரசியலில் உள்ளது.

ஆய்வாளர் ஹிற்ச் ரிஃப்லாட்டியின் பணி நீக்கம் பற்றி அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் டெப்பானில்ஒகம்போ ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், "மிகைப் படுத்தப்பட்ட கூற்றுகளையும் கெபெக்கிற்கு எதிரான கருத்துக்களையும் ஆய்வு என்ற பெயரில் எழுத முடியாது" என வலியுறுத்தினார். இலங்கைப் பத்திரிகையாளர்களும் ஆய்வாளர்களும் மகிந்த ராஜபக்ஸவும் நினைவில் வருவதைத் தடுக்க முடியாமல் உள்ளது!!!!

பதினெட்டு ஆண்டுகளின்பின் கிடைத்த அரசியல் தஞ்சம்!

ஹோஸே ஃபிகரோ பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் எல் சல்வடோரிலிருந்து கனடாவுக்குத் தப்பி வந்து அரசியல் தஞ்சம் கோரியவர். அவர் ஒரு "பயங்கரவாதி" அல்லர். எல் சல்வடோரின் கொடூரமான ராணுவ அரசுக்கு எதிராகப் போர் புரிந்த ஃபரப்ண்டோ மார்ட்டி தேசிய விடுதலை அமைப்பிலும் (Farabundo Marti national Liberation Front-FMLN) அவர் உறுப்பினர் அல்லர். எல் சல்வடோரில் மாணவ அமைப்புக்களின் தலைவராக இருந்தவர். ராணுவத்தால் தேடப்பட்டவர். எல் சல்வடோரின் ராணுவ அரசு அமெரிக்காவின் ஆதரவு பெற்றது. எல் சல்வடோர் ராணுவம் புரிந்த படுகொலைகளும் சித்திரவதைகளும் அந்த நாட்டின் ஆதிகுடிகள் மீது அவர்கள் கட்டவிழ்த்து விட்ட இனப்படுகொலையும் நன்கு ஆவணப்



படுத்தப்பட்டவை. எனினும் ஹோஸேயின் அகதிக் கோரிக்கை பலமுறை நிராகரிக்கப்பட்டது. மனிதாபிமான அடிப்படையில் கனடாவில் தங்கி இருப்பதற்கான அவரது கோரிக்கையும் பலமுறை ஹார்ப்பர் அரசால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

அவரை நாடு கடத்தக் கனடிய அரசாங்கம் முயன்றவேளை பிரிட்டிஷ் கொலம்பியாவின் லாங்லி என்னுமிடத்திலுள்ள கிறித்தவத் தேவாலயம் ஒன்றில் அவர் தஞ்சம் புகுந்தார். ஆலயங்களில் தஞ்சம் புகுந்திருப்பவர்களை போலிசாரும் குடிவரவு அதிகாரிகளும் உள் நுழைந்து கைது செய்ய முடியாது என்னும் வழக்கம் கனடாவில்ஆண்டாண்டுகாலமாக இருந்து வருகிறது. இரண்டு ஆண்டுகள் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த ஹோஸேயின் மனிதாபிமான விண்ணப்பத்தை புதிய்குடிவரௌ,அகதிகள்விவகார அமைச்சர் ஜோன் மக்கலம் ஏற்றுக் கொண்டதையடுத்து ஹோஸே அவர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது. அவர் நிரந்தர வதிவிட உரிமையும் அதன் வழியாகக் கனடியக் குடியுரிமையையும் இன்னும் சில ஆண்டுகளில் பெற்றுக் கொள்வார்.

ஹோஸேயைப் போல பல ஈழத் தமிழர்கள் கனடாவில் "திரிசங்கு சொர்க்கத்தில்" இருக்கிறார்கள். இவர்களுல் பலர் ஈழ விடுதலைப் போராட்டத்தில் தாம் ஈடுபட்டதை நேர்மையாக ஒப்புக் கொண்டவர்கள். இவர்களில் பலரை ஹார்ப்பர் அரசு நாடு கடத்துகிற முயற்சியில் ஈடுபட்டிருந்தது. நல்ல காலம். அந்த அரசு தோற்றுவிட்டது.அமைச்சர் ஜோன் மக்கலம் தமிழ்ப் போராளிகளுக்கும் நிரந்தர வதிவிட உரிமை வழங்க வேண்டும்.

1-ம் பக்க தொடர்ச்சி



வெளிப்படுத்துவதற்கான ஆரம்பம் 'சிங்க லே 'என்ற புதிய அமைப்பின் மூலம் இப்போது பரவலாக வளர்ந்து வருகிறது. பிற இனங்களுடனான சகிப்புத்தன்மை பற்றிய தேர்தல் கால கதை யாடல்கள் ஓரங்கட்டப்பட்டு இந்த இயக்கத்தின் செயற்பாடுகள் தீவிரம் அடைந்து வரு வருவதை இப்போதெல்லாம் அவதானிக்கக் கூடியதாக க உள்ளது. இதுபற்றிய விரிவான விபரங்களுடன் நமது மலையகம் இணையத்தளத்தின் பத்திரிகையாளரும் சமூக செயற் பாட்டாளருமான நோர்வேயில் வசிக்கும் என்.சரவணன் அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறோம்:

சமூக வெகுஜன ஊடகங்களை இன்று பேரினவாதத் தரப்பு பெருமளவு பயன்படுத்திவருகிறது. தமது சித்தாந்த பரப்புரைக்கு அவர்களுக்கு கிடைத்திருக்கும் மிகப்பெரும் ஆயுதமாக அவர்கள் இன்று சமூக ஊடகங்களையே நம்புகிறார்கள். இன்று பட்டி தொட்டியெல்லாம் சமூக ஊடகங்கள் வியாபித்துவிட்ட நிலையில் தமது இனவாத பிரசாரங் களுக்கு சிறந்த தளம் அது என்று திடமாக நம்பி இயங்கி வருகிறார்கள். பல்லாயிரக்கணக் கான முகநூல் பக்கங்கள், வலைத் தளங்கள், அவற்றுக்கான லட்சக் கணக்கான ஆதரவாளர்களை யும் அவர்கள் வென்றெடுத்திருக் கிறார்கள். அவர்கள் இந்த பிரசாரங் களை அடுத்த மட்டத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள்.

இவர்களின் போக்கை எதிர்த்து எதிர்வினையாற்றும் சிங்கள தரப்பும் இல்லாமலில்லை. சிங்கள் முற்போக்கு ஜனநாயக தரப்பு போதிய அளவு தமது எதிர்ப்பு களையும், பதிலடியையும் கொடுத்தே வருகிறார்கள். ஆனால் அது போதுமானதல்ல. மேலும் ஒவ்வொருமுறையும் சிங்கள பேரின வாதம் பௌத்த மதத்தையும் சேர்த்துக்கொண்டே தான் கிளம்பு கிறது. பௌத்த காவியுடை தரித்த பிக்குமாரின் தலைமையிலேயோ அல்லது அவர்களை துணைக்கு அழைத்துக்கொண்டோ கிளம்புகி றார்கள். பொலிசாரும், அதிகாரி களும், ஜனநாயக சக்திகளும் ஒரு கட்டத்திற்கு மேல் எதிர்ப்பு தெரிவிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுவிடுகிறார்கள். இந்த இனவாத குழுக்களும் இந்த பிக்குமார் மீது எப்போது இவர்கள் கைவைப்பார்கள் அதனை சாட்டாக வைத்து பிரச்சினையை கிளப்பி விடலாம் என்று காத்திருக் கிறார்கள். அந்த தைரியத்தில் பிக்குமார் சண்டியர்கள் போல நடந்துகொள்ளும் காட்சிகளை செய்திகளில் கவனித்தே வருகிறோம். ஏனையோர் கைகட்டி வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை என்கிற நிலை தொடர்கிறது.

சிங்கள ரத்தம்

இப்பேர் பட்ட நிலையில் தான் "சிங்க" "லே" என்கிற பரப்புரை தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக தொடங்கப்பட்ட முகநூல் கணக்கில் விருப்புக் குறியிட்டுக் கொண்டு போபவர்களின் எண் ணிக்கை லட்சத்தையும் தாண்டிச் சென்றுகொண்டிருக்கிறது. நாட ளாவிய ரீதியில் ஸ்டிக்கர்களை அச்சு செய்து விநியோகித்து வருகி றார்கள். கவரக்கூடிய வாசகங் களையும், வர்ணங்களையும் கொண்டு வடிவமைக்கப்பட்ட இந்த ஸ்டிக்கர்கள் பல இடங் களில் இப்போது விற்பனை செய்யப் படுகிறன. இலவசமாகவும் விநி யோகிக்கப்படுகின்றன. பாதையில் பல வாகனங்கள் நிறுத்தப்பட்டு பலாத்காரமாக ஒட்டப்படுகின்றன.

மேலோட்டமாக பார்த்தால் அதில் என்ன இருக்கிறது என்று தோன்றும். ஆனால் சிங்கள பௌத்த உணர்வை நிலைநாட்டுவதற்கான ஒரு உளவியல் உத்தி தான் இது. இவர்கள் உருவாக்கியுள்ள டீ சேர்ட் ஒன்றின் ரூபா 3500 வரைக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. அதனை அணிந்தபடி செல்பி படம் எடுத்து போடுவது பேஷனாக ஆகிவருகிறது. அதே வடிவத்தை உடலில் பச்சை குத்துவது பேஷ னாகிவருகிறது. இதனை எதிர்த்து கட்டுரைகள் கவிதைகள், செய்திகள் வெளிவரும் அதேவேளை இதனை ஆதரித்தும் பதிலடி கொடுத்தும்







அதேயளவு வெளிவருகின்றன.

இலங்கையில் பல முஸ்லிம் கடைகளிலும், வாகனங்களிலும் அரபி எழுத்தில் ஒரு வாளுடன் "லாஹிலாஹா இல்லல்லா" குர்ஆன் வாசகம் உள்ள ஸ்டிக்கர்கள் ஓட்டியபோது நீங்கள் எங்கே போனீர்கள் என்றுவாதிடுகிறார்கள் இவர்கள். சில மாதங்களுக்கு முன்னர் அந்த ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்ட முஸ்லிம்களின் முச்சக்கர வண்டிகளை மறித்து பலாத்காரமாக அந்த ஸ்டிக்கர்களை கழற்றி வம்பிழுத்த சம்பவங்கள் ஊடகங்களிலும் வெளியாகியிருந்தன. சவூதியில் இந்த சிங்க லே ஸ்டிக்கரை தனது காரின் இலக்கத் தகட்டில் ஒட்டி பெருமிதத்துடன் அந்த புகைப்படத்தை இணையங்களில் பதிந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. "சிங்க லே" என்பது அலை அல்ல புரட்சி என்கிறது ஒரு ஸ்டிக்கர்.

அவர்களே சிங்களவர் என்றும் பெரும்பாலான சிங்கள வரலாற்று இலக்கியங்களில் முன்வைக்கப்படுகின்றன.

இப்படி பலதரப்பட்ட கதைகளில் வலுவானதாக கருதப்படுவது இலங்கையின் முதலாவது சிங்கள மன்னனாக ஆன விஜயனின் பூர்வீகக் கதை. விஜயனின் தகப்பன் சிங்கபாகுவும், விஜயனின் தாயார் சிங்கவல்லியும் சிங்கத்துக்கும் பிறந்த உடன்பிறப்புக்கள் என்கிறது மகாவம்சம். மகாவம்சம் சிங்கள பௌத்தர்களின் வரலாற்றுப் புனித நூல். இது புனைகதை என்று நிராகரிக்கும் சிங்கள பௌத்தர்கள் மகாவம்சம் வெளிப்படுத்தும் ஏனைய இனவாத கதைகளை நிராகரிப்பதில்லை. ஆக சிங்கத்தின் வழித்தோன்றல் என்பதை சுட்டும் பெயரே "சிங்க" "லே". சிங்களத்தில் "லே' என்பது இரத்தம். ஆக சிங்கள இரத்த வழிவந்தவர்கள் என்று அழைத்துக்கொள்கிறார்கள்.

படுத்தினர் என்பதே அந்த குற்றச்சாட்டு. ராவண பலய இயக்கம் இன்னமும் பகிரங்கமாக அந்த தனிச்சிங்க கொடியைப் பயன்படுத்தி வருகிறது. சிதைக்கப்பட்ட தேசியக்கொடியின் இன்னொரு வடிவமே இப்போதைய "சிங்க லே" கொடியும். வாளேந்திய சிங்கத்தை மட்டும் வைத்துக்கொண்டு மிகுதி இடத்தில் "சிங்க லே" என்று பொறித்திருக்கிறார்கள். அதில் "லே" (இரத்தம்) என்பது மாத்திரம் தனித்து சிகப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சில சுவாரஷ்யமான பதிலடிகள் இவர்களுக்கு சிங்கள தரப்பிலிருந்தே கொடுக்கப்பட்டன. அதில் ஒன்று ஒன்று இப்படி கூறுகிறது.

"சைனீஸ் டெனிம் அணிந்து கொண்டு, பிரான்ஸ் நாட்டு "சன் கிளாஸ்" போட்டுக்கொண்டு ரிதிசியில் மத்தியானம் சாப்பிட்டு விட்டு இந்திய வாகனத்தின் பின்பக்கத்தில் (முச்சக்கர வண்டி) "சிங்க லே"

பெரேரா சமீபத்தில் வெளியிட்டிருந்த அறிக்கையொன்றில் இப்படி குறிப்பிடுகிறார். "கடந்த மூன்று வருடங்களுக்குள் நான் செய்தவை எவ்வாறிருந்த போதும், "சிங்கலே" தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க நான் எடுத்த முயற்சிகள் வெற்றியளித்துள்ளன". கடந்தவருடம் செப்டம்பர் 27 பொது பல சேனா கொழும்பு சுகததாச உள்ளரங்கில் பிரமாண்டமாக நடத்தி முடித்த மாநாட்டில் உரையாற்றிய டிலந்த பெரேரா இப்படி கூறியிருந்தார்.

"இதுவரை ஆட்சி செய்த சிங்கள அரசியல் தலைவர்களால் இந்த நாட்டின் பெயரை மீண்டும் "சிங்களே" என்று மாற்ற முடியாமல் போயிருக்கிறது. நாமெல்லோரும் சேர்ந்து ஆதனை சாத்தியப்படுத்த வேண்டும்"

பொது பல சேனாவின் முகநூல் பக்கங்களில் ஒன்றான "சிங்க லே எகமுத்துவ SinhaleUnity" (சிங்கள

அணிதிரட்டலை தொடங்கியிருப்பதாக ஞானசார தேரர் சமீபத்தில் அறிவித்திருந்தார்.

தமக்கு பேரினவாதமின்றி இருப்பில்லை என்கிற ஒரு கூட்டம் உருவாகியுள்ளது. தமக்கு தலைமை தந்த சக்திகள் பின்வாங்கினாலோ, பலவீனமுற்றாலோ கூட தாம் ஏதோ ஒருவகையில் இயங்கியே ஆவது என்கிற ஒரு கூட்டம் உருவாகியுள்ளது. வீதிகளில் பிச்சை எடுப்பவர்கள், வயோதிபர்கள் போன்றோரை சீண்டி உசுப்பேத்தி அதனை ரசிக்கும் மனம் பிறழ்ந்தவர்களை கண்டிருப்போம். இன்று சாதாரண சிங்கள மக்களை அப்படித்தான் இவர்கள் உசுப்பேத்தி வேடிக்கை பார்க்க கிளம்பியிருக்கிறார்கள். ஆனால் இதன் விளைவு விபரீதமானது.

இன்று தொடங்கப்பட்டுள்ள "சிங்க லே" பிரச்சாரம் அலட்சியபடுத்தக்கூடியதல்ல. அவதானமாக எதிர்கொள்ளவேண்டிய எச்ச

"இதுவரை ஆட்சி செய்த சிங்கள அரசியல் தலைவர்களால் இந்த நாட்டின் பெயரை மீண்டும் "சிங்களே" என்று மாற்ற முடியாமல் போயிருக்கிறது. நாமெல்லோரும் சேர்ந்து ஆதனை சாத்தியப்படுத்த வேண்டும்"





சிங்கள இனத்தின் தோற்றம், சிங்களம் என்பதன் அர்த்தம் குறித்து பல்வேறு வரலாற்றுக் கதைகளும், புனைகதைகளும் நிலவுகின்றன. ஆளுக்கொரு கதையையோ பல்வேறு கதைகளையோ காவித் திரிபவர்களை கண்டிருக்கிறோம். 10000 வருடத்திற்கு முந்திய பாரம்பரியத்தையும் கூறிக் கொள்கிறார்கள். சமீப காலமாக இராமாயணத்தையும் துணைக்கு அழைத்துக்கொள்கிறார்கள். இராமாயண உபகதைகளை தமது வரலாற்றோடு பொருத்தி பெருமளவு நூல்கள் சமீபகாலமாக வருவதை காண முடிகிறது. விஜயன் இலங்கை அடைந்தபோது யக்ஷ, நாக, ராக்ஷ, தேவ எனும் என்கிற நான்வகை ஆதிக்குடிகள் இருந்ததாகவும் விஜயன் இவர்கள் எல்லோரையும் இணைத்ததாகவும்

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கையின் தேசியக் கொடியில் தமிழ் முஸ்லிம் இனங்களைக் குறிக்கின்ற செம்மஞ்சள், பச்சை கோடுகளை நீக்கிவிட்டு வாளை ஏந்திய சிங்கத்தை மட்டும் கொண்ட கொடியை சிங்கள இனவாதிகள் தமது கூட்டங்களில், ஊர்வலங்களில் பயன்படுத்தி சர்ச்சைக்குள்ளானது தெரிந்ததே. கோத்தபாய ராஜபக்ஷ விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது நடந்த ஊர்வலத்தில் அந்த கொடியை அமைச்சர்களும் இனவாதிகளும் ஏந்தியிருந்தனர். அது சர்ச்சைக்குள்ளானதும் சிலர் அதற்காக மன்னிப்பு கோரினர் பலர் அதனை நியாயப்படுத்தினர். அது தொடர்பில் பாடகர் மதுமாதவவுக்கு எதிரான வழக்கும் இன்னமும் தொடர்கிறது. தேசியக்கொடியை விகாரப்

(சிங்க இரத்தம்) என்று ஸ்டிக்கர் ஒட்டிக்கொண்டு பெருமையுடன் ஒருவன் போகிறான் விமான நிலையத்திற்கு, மனைவியை சவூதிக்கு அனுப்ப..."

"இனவாதத்தை புதுப்பிக்கும் இந்த "சிங்க லே" சமூக வலைத்தள நடவடிக்கையை மேற்கொள்பவர்கள் சிறை செல்ல நேரிடும் காத்திருங்கள்" என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் 23 அன்று கடும் தொணியில் எச்சரித்திருந்தார்.

பின்னணியில் யார்?

இந்த "சிங்கலே" நடவைக்கையின் பின்னணியில் பொதுபல சேனா இருப்பது உறுதியாகியிருக்கிற போதும் அது பகிரங்கமாக தமது நடவடிக்கையாக அறிவித்துக்கொள்ளவில்லை. பொது பல சேனாவின் செயலாளர் டிலந்த

ஐக்கியம்) பக்கமும் தமது முகப்பு படமாக இதனையே வெளியிட்டுள்ளது. அந்த பக்கத்தில் இதனை ஒரு அரசியல் கட்சி என்றும் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. அவர்களின் உத்தியோக பூர்வ முகநூல் பக்கத்தில் "சிங்களவர்களே முதுகெலும்பிருந்தால் உங்கள் வாகனத்தில் இதனை ஒட்டுங்கள்" என்று வினவுகிறது. அதேவேளை அந்த டீ சேர்ட்டுகளை தாம் விற்கவில்லை என்றும் அப்படி அறிவித்தவர்களை கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளது பொது பல சேனா. அவர்கள் இந்த நாட்களில் மீண்டும் பழையபடி மாநாடுகளை நடத்தித் திரியும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இம்முறை இரண்டாம் மட்ட பௌத்த பிக்குகளை இலக்கு வைத்து தமது

ரிக்கை. சிங்கள பௌத்தர்களை பேரினவாதநோக்கில் அணிதிரட்டும் ஒரு கண்மூடித்தனமான நடவடிக்கை. சிங்கள நாடு, சிங்கள தேசம், சிங்களத்தனம், சிங்கள பூர்விகம், என்கின்ற சித்தாந்தங்களை பரப்பும் ஒரு உளவியல் நடவடிக்கை.

தூய சிங்கள பௌத்தம், சிங்கள பௌத்த புனிதம் போன்றவற்றுக்கூடாக ஏனைய சமூகங்களை புறமொதுக்கும் மனநிலையை உருவாக்கும் அலை. இந்த புதிய வடிவத்தில் தொடங்கப்பட்டிருக்கும் நடவடிக்கை சாதாரணர்களை மீண்டும் உசுப்பேத்தி, புதியவர்களை பேரினவாத சித்தாந்தத்துக்குள் இழுத்து அணிதிரட்டும் இன்னொரு கைங்கரியம். இந்த வடிவங்கள் நீளும். இன்று இது... நாளை எது?

~~சிறி~~ ரெலோ

அரசியலில் நண்பனுமில்லை எதிரியுமில்லை என்பார்கள். இதற்கு ஆகச்சிறந்த உதாரணமாகியுள்ளது ரெலோ கட்சி. ஒரு காலத்தில் எதிரெதிர் அணியில் நின்றவர்கள் இப்பொழுது 'நாங்களெல்லாம் ஒன்றுக்குள் ஒன்று' என கூட்டாக திரிய ஆரம்பித்துள்ளதை மற்றக் கட்சிக்காரர்கள் கடைக்கண்ணால் நோட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்களின் இனப்பிரச்சனையை தீர்க்காவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்துறப்பேன் என சத்தமாக அறிக்கைவிட்டு, ஊரெல்லாம் போஸ்ரர் ஒட்டினார் செல்வம் அடைக்கலநாதன். இதுநடந்தது மகிந்த ராஜபக்சவின் காலத்தில். அப்பொழுது மகிந்த ராஜபக்சவின் கைக்குள் இருந்த தமிழ்அணியின் பிரதானிகளிலொருவர் உதயராசா. சிறிரெலோ என்ற கட்சியின் தலைவர். இரண்டு பிரிவாக இருந்த ரெலோ ஒன்றாகி, தலைவர்கள் கைகோர்க்கிறார்கள் என்பதே உள்வீட்டு தகவல்கள். இரண்டு தரப்பும் பரபரப்பு பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். விரைவில் உத்தியோகபூர்வ அறிவித்தல் வருமாம்.

'சொல்லை' மறந்த செல்வம்

தமிழர்களின் போராட்டம் ஆயுதப்போராக பரிணமிக்க ஆரம்பித்த காலத்தில் தோன்றிய முப்பது சொச்ச இயங்களில் ஒன்று ரெலோ. அப்பொழுதிருந்த பெரிய இயக்கங்களில் ஒன்று. நல்ல வளமாகவும் இருந்தது. இப்பொழுது கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இப்படி வந்து நிற்கிறது.

ரெலோவின் ஆரம்ப தலைவர் சிறிசபாரத்தினம் கொல்லப்பட்ட பின்னர் தலைமைப்பதவிக்கு வந்தவர்தான் தற்போதைய தலைவர் செல்வம் அடைக்கலநாதன். 1990களின் பின்னர் அது கிட்டத்தட்ட சிறிய குழுவாகத்தான் இயங்கத் தொடங்கியது. அந்த அமைப் பிலிருந்தவர்களில் கணிசமானவர்கள் பொது வாழ்க்கைக்கு திரும்பி உள்ளூரில் வாழ, கொஞ்சப்பேர் வெளிநாடுகளிற்கு சென்றனர். மிகுதியான சொற்பபேர்தான் அந்த அமைப்பில் தொடர்ந்து இயங்கினார்கள்.

2000 களின் தொடக்கத்தில் புலிகள் தமிழ்தேசிய கூட்டமைப்பை ஸ்தாபித்தபோது ரெலோவிற்கும் அங்கத்துவம் வழங்கினார்கள். அதுவரை அரசாங்கத்தின் தயவில் இயங்கியது, வவுனியாவில் 'ரணகளமாக' நடந்து கொண்டது போன்ற பல குற்றச்சாட்டுகளிருந்து பாவ மன்னிப்பு வழங்கியது அந்த அங்கத்துவம். அதன்பின்னர் அதிதீவிர தமிழ்தேசியகட்சியானது ரெலோ.

இதன் உச்சம்தான் தீர்வு தராவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என கடந்த ஆண்டில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் விட்ட அறிக்கை. அதனை போஸ்ரர் அடித்து



வவுனியா, மன்னாரில் சரமாரியாக ஒட்டி அமர்களப்படுத்தினார்கள் கட்சித் தொண்டர்கள். பின்னர் அதனை எல்லோருமாக சேர்ந்து மறந்தது வேறுகதை.

அவர் அறிக்கைவிட்ட திகதியில் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வவுனியா செல்லப்பிள்ளை உதயராசா. அவர் சிறிரெலோ என்ற கட்சியின் தலைவர்.

பசையாக ஒட்டிய பசில்

ஆரம்பகால ரெலோ போராளி. பின்னர் அதைவிட்டுவிட்டு வெளிநாடு சென்றார். பின்னர் திரும்பி வந்து கட்சியை ஆரம்பித்தார். அவரது வரவு குறித்த பல்வேறுவிதமான தகவல்கள் ஏற்கனவே ஊடகங்களில் உலாவியிருந்தது. மகிந்த அரசின் செல்லப்பிள்ளையாக திரும்பிவந்தார், பசிலுடன் நெருக்கமாக இருந்தார் என பலகதைகள் பரபரப்பாக ஓடியது.

சிறிரெலோ கட்சிபற்றிய அண்மைய பரபரப்புயாழ்பல்கலை கழகத்துடன் தொடர்புடையது. சிலவருடங்களின் முன்னர் யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்களை 'ஒருவழிக்கு' கொண்டுவர அப்போதைய மகிந்த அரசு ஒரு 'ஒப்ரேசனை' ஆரம்பித்தது. அந்த ஆரம்பத்துடன் சிறிரெலோ தொடர் புபட்டிருந்தது. பல்கலை கழகத்திற்கு அண்மையில் திறந்து ஒருநாளேயான அந்தகட்சி அலுவலகத்தில் மீது பெற்றோல் குண்டு தாக்குதல் நடந்து, அதனுடன் தொடர்புடையவர்களை கைது செய்கிறோம் என்று 'கிடுக்குப்பிடி' ஆரம்பித்ததும் ஒருகாலத்தின் பரபரப்பு செய்திகள். அலுவலகத் திறப்பையும், மாணவர்கள் கைதையும் முடிச்சுப்போட்டு ஒரு தரப்பு பேசியதும், அது மொட்டந்தலைக் கும் முழங்காலிற்கும் முடிச்சுப் போடும் விசயம் என சிறிரெலோ மறுத்ததும் பின்னர் நடந்தவை.

பசில் ராஜபக்சவுடன் சிறிரெலோவின் தலைவருக்கு நல்ல நெருக்கமிருந்தது என்று பரவலாக கூறப்படுகிறது. மகிந்த ஆட்சியில் தேர்தல் விவகாரங்களை கையாண்டது பசில். அவரின்றி அணுவும் அசையாது. அப்போது நடந்த வடமாகாணசபை தேர்தலில் பிரமாண்ட ஏற்பாடுகளுடன் அரசதரப்பு களமிறங்கியது. மகிந்த கூட்டணியில் களமிறங்கிய உதராசா மயிரிழையில் தோல்வியடைந்தார். மீண்டும் சளைக்காத விக்கிரமாதித்தனாக கடந்தபொதுத் தேர்தலிலும் களமிறங்கினார். அப்பொழுது மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக ஊரே கைகோர்த்தது. உதயராசா மட்டும் மகிந்த அணியுடன் கைகோர்த்தார். மீண்டும் தோல்வி.

கத்தரிக்காய் தத்துவம்

அந்த தேர்தலின்போதே பலர் அவருக்கு ஆலோசனை சொல்லியுள்ளனர், செல்வம் ரெலோவுடன் இணைந்து கொள்ளலாம் என. எனினும், வெற்றிபெறலாமென அவருக்கு நிறைய நம்பிக்கை இருந்ததால் அப்பொழுது அந்தஎண்ணத்தை தட்டிக்கழித்து விட்டார். எனினும் தேர்தல் தோல்வியின் பின்னர் அந்த எண்ணத்தை தூசு தட்டி இணைவு பேச்சுக்களை துரிதப்படுத்தியுள்ளார்.

இரண்டு தரப்பும் பலசுற்று பேச்சுக்கள் நடத்தி, இணையலாம் என்ற நிலைக்கு வந்துள்ளதாக உள்வீட்டு தகவல்கள் கூறுகின்றன. இணைகிறோம் என பகிரங்கமாக இதுவரை அறிவிக்கவில்லையே தவிர, மற்றும்படி இரண்டு தரப்பும் மிக நெருக்கமாக உள்ளதாம். விரைவில் இணைவு அறிவித்தல் வருமென தெரிகிறது.

இதேவேளை, இந்த இணைவிற்கு செல்வம் தரப்பிற்குள் சில எதிர்ப்பும் இல்லாமலில்லை. சிறிரெலோவை இணைத்தால் கட்சி பற்றிய வேறுவிதமான அபிப்பிராயம் ஏற்பட்டுவிடுமென்ற சில எதிர்க் குரல்கள் உள்ளுக்குள் இல்லாமலில்லை.

இப்போதைய நிலைமையில் செல்வம் தரப்பு இணைவை பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

> **ஆரம்பகால ரெலோ போராளி. பின்னர் அதைவிட்டுவிட்டு வெளிநாடு சென்றார். பின்னர் திரும்பி வந்து கட்சியை ஆரம்பித்தார். அவரது வரவு குறித்த பல்வேறுவிதமான தகவல்கள் ஏற்கனவே ஊடகங்களில் உலாவியிருந்தது. மகிந்த அரசின் செல்லப்பிள்ளையாக திரும்பிவந்தார்.**

முதற்கட்ட பேச்சு நடந்துள்ளது என சொல்லிவிட்டு ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

சிறிரெலோ கட்சியை கலைத்துவிட்டு, அதன் உறுப்பினர்கள் ரெலோவில் இணைந்து கொள்ள விரும்பம் தெரிவித்தார்கள். நாங்கள் பரிசீலித்து, முதற்கட்டப் பேச்சை முடித்துள்ளோம். அடுத்தடுத்த கட்டங்களில் பேச்சு வெற்றியாக அமைந்தால் பகிரங்கமாக அறிவிப்போம் என எச்சரிக்கையாக பேசினார்கள். அவர்களின் பேச்சின் எச்சரிக்கையிலேயே புரிந்தது, 'அமுக்கமாக' விசயத்தை முடிக்க திட்டமிட்டுள்ளார்கள் என்பது.

செல்வம் அடைக்கலநாதன்
தலைவர், ரெலோ

சிறிரெலோவை கலைத்துவிட்டு எம்முடன் இணைவதாக அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அதுபற்றி ஆராய்ந்துள்ளோம். மத்தியகுழுதான் இறுதி முடிவெடுக்க வேண்டும். மத்தியகுழு அங்கீகரித்தால் அவர்களை இணைத்துக் கொள்வோம். அவ்வளவுதான்.

மறுவளமாக சிறிரெலோ கூறுகிறது, உறுப்பினர்களின் விருப்பம் அப்படியுள்ளது. இதனால் உறுப்பினர் மட்ட பேச்சு நடக்கிறது. விரைவில் எல்லாம் தெரியவரும் என.

'கத்தரிக்காய் மலிந்தால் சந்தைக்கு வரும்' என ஊரில் விசயமில்லாமலா சொல்லிவைத்தார்கள்!




உதயராசா
தலைவர், சிறிரெலோ

இணைவுக்கான முயற்சிகள் நடக்கிறதுதான். இரண்டு கட்சிகளும் இணையலாமென இருதரப்பு உறுப்பினர்களும் விரும்பியதால் சில மட்டங்களில் பேச்சுக்கள் நடக்கிறது. ஆனால் தலைவர்கள் மட்டத்தில் இன்னும் பேச்சு நடக்கவில்லை. இதுவரையான பேச்சுக்கள் சுமுகமாகவே முடிந்துள்ளன. இனியும் சுமுகமாகவே எல்லாம் நடக்கும். இணைவுப் பேச்சு வெற்றியளிக்குமென்பது நம்பிக்கை.



இந்த பரபரப்பிற்குள் இன்னொரு விவகாரத்திலும் ரெலோவை ஊடகங்கள் வறுத்தெடுக்கின்றன. வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்ளமாட்டேன், அது கட்சியின் மத்தியகுழுவின் முடிவென கட்சித்தலைவர் செல்வம் அடைக்கலநாதன் சூடாக அறிக்கைவிட்டுக் கொண்டிருக்க, அந்தக்கட்சியின் கிழக்கு எம்.பி கோடீஸ்வரன் வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்துள்ளார். அதற்கடுத்த சம்பவம்தான் எல்லாவற்றையும் தூக்கிச்சாப்பிடும் சம்பவம். வரவு செலவுத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதும், சபாநாயகரின் இல்லத்தில் நடந்த சம்பிரதாய இராப்போசன விருந்திலும் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டிருந்தார். இந்தப்படங்கள் இப்பொழுது வெளியாகி சர்ச்சையை தோற்றுவித்துள்ளன.



> 1960 ஆம் ஆண்டு வீரகேசரிப் பத்திரிகையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் போது அங்கு வேலையை இழந்து யாழ்ப்பாணம் வந்து ஈழநாடு பத்திரிகையில் இணைந்து கொண்டேன்

‘மாமனிதனால்’ நெகிழ்ந்த கோபு ஐயா

சரண்யா

தமிழ் ஊடகத்துறையில் கோபு ஐயாவை தெரியாதவர்கள் இருக்க முடியாது. பொதுவாக ஊடகத்துறையில் இருப்பவர்களை மக்கள் அறிவதில்லை. ஆனால் கோபு ஐயா விடயத்தில் நேர்மாறு. அவரது ஆளுமை அவரை வாசகர்களிடமும் கொண்டு சென்றது. அப்படியான பத்திரிகை ஆளுமைகள் நம்மத்தியில் அரிது.

அண்மையில் தொல்புரம் சிவபூமியில் கோபு ஐயாவை சந்திக்க சென்றோம்.

ஊடகத்துறைக்கான பிரவேசம் எவ்வாறு இருந்தது?

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியை பிறப்பிடமாக கொண்ட கோபு ஐயா, 1953ஆம் ஆண்டு ஒப்பு நோக்குனராக வீரகேசரி பத்திரிகையில் பத்திரிகை வாழ்க்கையை ஆரம்பித்தார். உதவி ஆசிரியராக இருக்கின்ற காலப் பகுதியில்72.50சதமேமுதல்கிடைத்த சம்பளம். அதனைவிட இரவு வேலைகள் செய்தால் 1ரூபா அதிகமாக கிடைக்கும் என்ற காரணத்தினால் இரவு வேலைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வேன் என்கிறார்.

‘அன்றைய காலத்தில் வீரகேசரிக்கு அதிகளவான வாசகர்கள் மலையகத்திலேயே இருந்தனர். அதை நம்மவர் பக்கம் திருப்புவதற்காக நமது பிரச்சினைகள் தொடர்பிலும் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதினேன்.

அப்போது இந்திய எழுத்தாளர் சரத் சந்திர சட்டர்ஷி எழுதிய புத்தகங்கள் அதிகளவாக எனக்கு கிடைத்தன. நான் அவைகளை அதிகளவாக படிப்பதுண்டு.

1954ஆம் ஆண்டு வீரகேசரிப் பத்திரிகையில் உதவி ஆசிரியராக பதவியுயர்வு பெற்றேன். கலையரங்கம் அன்று உள்ளூர் கலை நிகழ்வுகளை பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது அன்று அதற்கொரு தனி மவுது இருந்தது. ஊர்சுற்றி பதிலளிக்கிறார் என்று வாசகர்களின் கேள்விகளுக்கு பதில்களை எழுதுவேன்.

1960 ஆம் ஆண்டு வீரகேசரிப் பத்திரிகையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் போது அங்கு வேலையை இழந்து யாழ்ப்பாணம் வந்து ஈழநாடு பத்திரிகையில் இணைந்து கொண்டேன்’ என்றார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகிய காலைக்கதிர்,செய்திக் கதிர், ஈழமுரசு, ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளிலும் மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் தினக்கதிர் பத்திரிகையிலும் ஆசிரியராக பணி புரிந்துள்ளார். 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையடுத்து இந்திய அமைதிப்படை வடக்கு, கிழக்கு மாகணங்களில் நிலைகொண்டிருந்த நேரத்தில் “சலோ சலோ ஜல்தி சலோ” என்ற தலைப்பில் வடக்கிலிருந்து இந்திய இராணுவமே வெளியேறு என்று அவர் எழுதிய ஆசிரியர் தலையங்கம் அப்போது பரவலான கவனத்தை ஈர்த்தது.

தினக்கதிர் பத்திரிகையில் எழுதிய ஆசிரிய தலையங்கங்களின் தொகுப்பாக “அந்த ஒரு உயிர் தானா உயிர்” என்ற நூல் வெளியாகியுள்ளது. அப்படியான தொகுப்பொன்றை மீண்டும் வெளியிட வேண்டுமென்று விரும்புவதாக சொன்னார். இன்று ஊடகங்கள் விற்பனையை மாத்திரம் மையமாக கொண்டுள்ளன என்ற வருத்தம் அவரிடமுள்ளது.

பல்வேறு விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. என்றாலும், அவர் இன்றும் நெகிழ்ச்சியாக நினைவுகூர்வது மாமனிதர் விருதைத்தான். எனக்கு கிடைத்த கௌரவம் இனி ஒரு தமிழனுக்கு கிடைப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை என்று நெகிழ்ச்சியுடன் கூறினார்.



அஸ்மின் எங்களை ஏமாற்றினார் பெண்களின் புகார்

சிகான்

‘வடமாகாணசபைஉறுப்பினர் ஆயுப் அஸ்மின் எங்களை மோசம் செய்துவிட்டார். நீண்ட காலமாக ஏமாற்றி வருகிறார்’ இப்படியொரு பரபரப்பை கிளப்பியுள்ளனர் இரண்டு பெண்கள். வடமாகாணசபையின் கட்டிட தொகுதிக்குள் நுழைந்து அவர்கள் வைத்த கண்ணீர் கோரிக்கைதான் இன்றைய திகதியில் பட்ஜெட்டை விடவும் மாகாணசபைக்குள் சூடான விவாதப்பொருள்.

மாகாணசபைஉறுப்பினர் ஆயுப் அஸ்மின் தங்களிடம் வாங்கிய பணத்தை தரவில்லை, நீண்ட நாட்களாக ஏமாற்றிவருகிறார் என்பது பெண்களின் பரபரப்பு குற்றச்சாட்டு. எனினும், அஸ்மின் தரப்பு அதனை மறுக்கிறது. தான் யாரிடமும் கைநீட்டி பணம் வாங்கவில்லை, பள்ளிவாசல் வாங்கிய பணத்திற்கு பொறுப்பு நின்றது மட்டுமே நான் செய்ததென்பது அவர்கள் வாதம்.

எனினும், மாகாணசபை உறுப்பினர் அந்தப்பெண்களிற்கு பணம் கொடுக்க வேண்டுமென்பதே உண்மையென்கிறார்கள் பள்ளிவாசல் தரப்பினரும். பணம் கொடுக்கத் தேவையில்லையென்றால், எதற்காக மாகாணசபைக்குள் வைத்து பணம் தருகிறேன் என



வாக்களித்தார் என்பது இரண்டு பெண்களின் கேள்வியும்.

வடமாகாணசபையின் 40வது அமர்வுகள் கடந்த 10ம் திகதி கைதடியில்நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது இரண்டு பெண்கள் திடீரென மாகாணசபைக்குள் நுழைந்தனர். வடக்கு எதிர்கட்சி தலைவரின் அலுவலகத்திற்குள் நுழைந்து அவரடன் ஏதோ பேசினார்கள். மாகாண சபையின் பாதுகாப்பு ஏற்பாடுகளை உடைத்துக் கொண்டு எப்படி உள்நுழைந்தார்கள் என்பதுதான் புரியாதபுதிராக உள்ளது.

எதிர்கட்சி தலைவரை சந்தித்து பேசிய பின்னர், அவரது அலுவலகத்தை விட்டு பெண்கள் இருவரும் வெளியில் வந்தனர். அப்பொழுது திடீரென அங்கு வந்த உறுப்பினர் ஆயுப் அஸ்மின், ‘ஏன் இங்கே வந்தீர்கள்?, யார் உங்களை அனுப்பியது?’ என பதற்றக் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்.

அந்த வார்த்தைகளுடன் தொடங்கியதுதான். அதன்பின்னர் அந்தப்பகுதியே பரபரப்பானது. பெண்கள்இருவரும் அடுக்கடுக்காக குற்றச்சாட்டுக்களை சுமத்தி குமுறத் தொடங்கிவிட்டனர்.

‘நாலு வருசமாக பணத்தை தராமல் இழுத்தடித்து கொண்டிருக்கிறீர்களே.. அந்தப்பணத்தை தந்தால் ஏன் இப்படி உங்களின் பின்னால் இழுபடுகிறோம்’ என அவர்கள் பரபரப்பு குற்றம்சாட்ட, மாகாணசபைக்குள் ‘ஆர்வம்’ தொற்றிக் கொண்டது. என்ன ஏதென பலரும் காது கொடுக்க ஆரம்பித்தனர்.

விடயம் வில்லங்கமாகிக் கொண்டே சென்றது. பெண்களின் குற்றச்சாட்டு கூப்பாடாக மாறத் தொடங்கியது. ஒரு பக்கம் பெண்களின் விவகாரம் மறுபக்கம் மாகாணசபை அமர்வுகள்.

பெண்களின் குரல் ஓங்கத் தொடங்கியதும், அவர்களை அங்கிருந்து போகுமாறு அஸ்மின் வற்புறுத்தத்தொடங்கினார். ‘அந்தப் பணம் பள்ளிவாசல் ஒன்றுதான் உங்களிற்கு தர வேண்டும். நான் அதை நான்கு வருடங்களின் முன் பொறுப்பு நின்றேன். அந்தப் பணத்தை என்னால் தரமுடியாது’ என அஸ்மின் கூற, அதற்கு பெண்கள் தரப்பு பதில்கொடுக்க, எகிறல் ஆரம்பித்தது.

‘அது பள்ளிவாசல் எமக்கு தர வேண்டிய பணமல்ல. பள்ளிக்கும் அதற்கும் தொடர்பில்லை. நீங்கள் எங்களை ஏமாற்றுகிறீர்கள். போனில் தொடர்பு எடுத்தாலும் பதில் சொல்கிறீர்கள் இல்லை. உங்களை தேடித்தேடி களைத்து விட்டோம். அதனால்த்தான் இந்தசபையில் நியாயம் கேட்க வந்தோம்’ என அவர்கள் கொதிக்க, கைதடி கலவரபூமியாகியது.

நிலைமை மோசமாவதை உணர்ந்த அஸ்மின், பக்கத்தில் செய்திசேகரித்து கொண்டிருந்த ஊடகவியாளர் ஒருவரின் உதவியை நாடியுள்ளார். ‘என்ன பாடென்றாலும் பட்டு, அவர்களை அனுப்பிவிடுங்கள். பணத்திற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்’ என அஸ்மின் தடாலடியாக அவரிடம் சரணடைந்துள்ளார்.

ஊடகவியலாளரும் நிலைமையை சமாளிக்க முயன்றுள்ளார். எனினும்பெண்களின்பிடி உடும்புப் பிடியாக இருந்தது. அங்கிருந்து நகர மறுத்துவிட்டனர். இதற்குள், மாகாணசபை உறுப்பினர் சயந்தனும் அஸ்மின் சார்பில் களமிறங்கினார். ‘ஏன் இந்தப் பெண்ணை உள்ளே அனுப்பினீர்கள்’ என பாதுகாப்பு ஊழியர் மீது சீறிப்பாய்ந்தார்.

பெண்களின் பிடியும் இளகவில்லை. ‘இந்த கொடுக்கல் வாங்கலில் தமக்கு சம்பந்தமில்லையென பள்ளி நர்வாகம் கைவிரித்து விட்டது. பணம் கிடைக்காமல் இங்கிருந்து போக மாட்டோம்’ என அடம்பிடிக்க ஆரம்பித்தனர்.

நிலைமையை சமாளிக்க முடியாமல் போனதும், பெண்களுடன் சமரசத்திற்கு வந்தார் அஸ்மின். தனியறைக்கு பெண்கள் இருவரையும்அழைத்து சென்றார். மத்தியஸ்தராக அந்த ஊடகவியலாளரையும் அழைத்தார். அன்று மாலையே பெண்களின் பணப்பிரச்சனையை தீர்ப்பதாகவும், ஊடகவியலாளர் அதற்கு சாட்சியாக இருப்பார் என்றும் அஸ்மின் கூறினார்.

இதன்பின்னர்தான் பெண்கள் அமைதியடைந்து வெளியேறினார்கள். பெண்கள் வெளியேறி விட்டார்களா என நிமிடத்திற்கொருமுறை ஊடகவியலாளரிடம் குறுஞ்செய்தியில் அஸ்மின் பதற்றத்துடன் வினாவிக் கொண்டிருந்த சுவாரஸ்யம் எல்லாம் நடந்தது.

பின்னர் அந்த ஊடகவியலாளரை தொலைபேசியில் அழைத்து, ‘அராலி வீதியிலுள்ள அபூபக்கர் பள்ளிவாசலிற்கு அந்தப் பெண்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு வாருங்கள். அந்தக்கணக்கை முடித்து விடுகிறேன்’ என கூறியுள்ளார்.

அஸ்மினின் பேச்சை நம்பிய இரண்டு பெண்களும் மாலையில் பள்ளிவாசலிற்கு சென்றுள்ளனர். ஊடகவியலாளரும் அங்கு சென்றிருக்கிறார். மாகாணசபை உறுப்பினர் வருவார் என அவர்கள் காத்திருந்தார்கள், காத்திருந்தார்கள். காத்திருப்பின் எல்லை வரை காத்திருந்திருக்கிறார்கள். இரவு எட்டுமணியாகியும் அஸ்மின் அங்கு செல்லவில்லை. பின்னர் ஊடக வியலாளருடன் தொலைபேசியில் இதுபற்றி பேசியபோது ‘அந்த விவகாரத்தை இத்துடன் விட்டுவிடப் போகிறேன்’ எனக்கூறி தொலைபேசியை நிறுத்திவிட்டார் என்கிறார்கள்.

எது எப்படியோ, இது சாதாரண பிரச்சனையென்றோ அல்லது இலகுவில் முடியும் பிரச்சனையென்றோ கருத முடியவில்லை. அடுத்துவரும் நாட்களில் இந்த விவகாரத்தில் புதிய பூதங்கள் கிளம்பலாம்.

பெண்ணின் குற்றச்சாட்டின்படி மாகாண சபை உறுப்பினர் 80 ஆயிரம்ரூபா பணத்தை கொடுக்க வேண்டியுள்ளது.

மாகாண சபை உறுப்பினர் எனது கணவனிடம் பெற்ற கடனை தராமல் 4 வருடங்களாக ஏமாற்றுகிறார். தேடிச்சென்றால் அவரை கண்டு பிடிக்க முடியவில்லை. தொலைபேசிக்கும் பதிலளிப்பதில்லை. அவரை சந்தித்து பணத்தை கேட்க வேறுவழியில்லையென்பதால்த் தான் மாகாண சபைக்கு சென்றேன்.

இந்த குற்றச்சாட்டுக்களை ஆயுப் அஸ்மின் தரப்பு நிராகரித்துள்ளது. தம்மீது சேறுபூசுவதற்காக குழுவொன்று வரிந்து கட்டிக்கொண்டு களமிறங்கியுள்ளது என்பது அவர்களின் வாதம். இந்தக்குற்றச்சாட்டுக்களின் பின்னணி, யாழ்ப்பாண முஸ்லீம்களின் பொதுச்சொத்தை சூறையாடும் நோக்கம் கொண்டதென அவர்கள் கூறுகிறார்கள்.


Hon.Azmin Aiyoob Member NPC


வடக்கு மாகாண சபை
උතුරු පළාත් සභාව
Northern Provincial Council

14-12-2015

கொடுக்கல்வாங்கல் சார்ந்த குற்றச்சாட்டு தொடர்பிலான விளக்க அறிக்கை


[illegible]

332, Muslim College Road, Muslim Ward, Jaffna, 0770525391 0778570307


ஜோன் எலெக்ரிக் சென்ரர்
JOHN ELECTRIC CENTER
Dealers: S.Lon Pipes, Electrical Goods & Motor Pump
For: Electrical Plumbing & Antena Fitting, Contractors & Motor Winding.
Manipay Road, Jaffna.

05/12/2015

[illegible]



டேவிட் பூபாலபிள்ளை

கனடாவும் அகதிகளும்

கடந்த வார இதழிலே 1939 ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஜெர்மனியிலிருந்து சென்ற் லூயிஸ் கப்பல் மூலம் வந்த யூத அகதிகளுக்கு கியூபாவும், அமெரிக்காவும் புகலிடம் தர மறுத்ததைப் பார்த்தோம். 1939 ஆம் ஆண்டு ஆனி மாதம் இரண்டாம் நாள் கியூபாவின் ஹவானா துறைமுகத்தை விட்டு நீங்கும்படி உத்தரவிடப்பட்ட அக்கப்பலை அமெரிக்காவும் ஏற்றுக்கொள்ள மறுக்க, அக்கப்பலில் இருந்த சுமார் ஆயிரத்திற்கும் யூத அகதிகளின் ஒரே ஒரு புகலிடத் தஞ்சமாக கனடாவே இருந்தது.

அமெரிக்க கடற்பரப்பிலிருந்து கனடா கடற்பரப்பை நோக்கி நகர்ந்த கப்பலையும் அதன் பிரயாணிகளையும் கனடாவும் உள்நுழைய அனுமதி மறுத்துக் கொண்டேயிருந்தது. கனடாவின் கலிபக்ஸ் துறைமுகத்திற்கு தொலைவில் கனடாவின் கடல் எல்லைக்கு அருகாமையில் இக்கப்பல் நிலைகொண்டு கனடாவிற்குள் வருவது குறித்து கனடிய அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டன. நான் கடந்த இதழில் குறிப்பிட்டவாறு கனடாவில் இவர்களுக்கு இருந்த ஆதரவாளர்கள் கனடிய அரசை மாற்ற பல முயற்சிகள் மேற்கொண்டனர். அவர்களது ஒவ்வொரு முயற்சியும் தோல்வியிலே முடிந்தன.

கனடிய அரசு அந்த யூத அகதிகளை உள்நுழைய விடக்கூடாது என்ற தீர்மானத்தில் மிக இறுக்கமாகவே இருந்தது. அது மட்டுமல்ல அந்தக் கப்பல் கனடிய தரையை வந்தடைய முடியாத வண்ணமும் அது மிகக் கவனமாக பார்த்துக் கொண்டது. கனடிய அரசின் இந்த நடவடிக்கைகளினால் அந்தக் கப்பலில் இருந்த யூத அகதிகளின் கடைசி நம்பிக்கையான கனடாவில் தரை இறங்கும் முயற்சியும் கைகூடாமல் போனது.

இதே நேரத்திலே கடலிலே நிலைகொண்டிருந்த கப்பலில் பிரயாணிகளுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் இதர அத்தியாவசிய பொருட்களின் கையிருப்பும் குறையத் தொடங்கியது.

இறுதியாக கனடாவிலும் தரை இறங்கும் முயற்சிகளை கைவிட்டு, 1939 ஆம் ஆண்டு ஆனி மாதம் 7ம் திகதி சென்ற் லூயிஸ் கப்பல் மீண்டும் ஐரோப்பா நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்தது. சரியாக பத்து நாட்களின் பின்னர் 1939 ஆம் ஆண்டு ஆனி மாதம் 17ம் திகதி பெல்ஜிய நாட்டின் அன்ற்வேர்ப் துறைமுகத்தை சென்றடைந்தது.

இக் கப்பல் பிரயாணிகளில் பலர் ஹிட்லரின் கோரப்பிடியில் மீண்டும் சிக்கி, சிறைப்பிடிக்கப்பட்டு நச்சு வாயு ஊட்டப்பட்டு உயிரிழந்ததுதான் இக்கப்பல் பிரயாணிகளுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய சோக முடிவாகும்.

ஒரு கோர முதலையின் பிடியிலிருந்து தப்பி வந்தவர்களை மீண்டும் அந்த முதலைக்குதீனியாக்குவது போல இந்தக் கப்பல் பிரயாணிகளின்(யூத அகதிகளின்) வாழ்க்கை முடிந்து போனது.

இப்படியாக இவர்களை அன்று தன் கரையிலே, ஏன் தன் நீர்ப் பரப்பிலே கூட வருவதற்கு அனுமதி மறுத்து கனடா இன்னொரு பெரிய மாறாத வடுவை தன் குடிவரவுச் சரித்திரத்தில் பதித்துக் கொண்டது.

ஏறத்தாழ 60 இலட்சம் யூத மக்களை இனப்படுகொலைக்கு உள்ளாக்கிய 12 வருட கால ஹிட்லரின் கொடுங்கோல் ஆட்சிக்காலத்தின்போது சுமார் 5000 யூத அகதிகளை மட்டுமே கனடா ஏற்றுக் கொண்டது. இது அன்றைய ஜனநாயக நாடுகளின் அகதி அனுமதிகளுடன் ஒப்பிடும்போது ஒப்பீட்டளவில் மிகக் குறைவானது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் உலகப்போரின் ஆரம்பத்தில் அன்றைய பிரித்தானியாவால் சுமார் 2500 ஆண்கள் ஆபத்தானவர்கள் எதிரி படைகளுடன் சேரக் கூடியவர்கள் என்ற அடிப்படையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் யூதர்களாகவே இருந்தனர். 1940 ஆம் ஆண்டிலே இவர்கள் எல்லோரும் பிரித்தானியாவில் இருந்துகனடாவுக்குகொண்டுவரப்பட்டு கனடாவிலே மிகுந்த பாதுகாப்புடன் கூடிய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர். இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்த பின்னர் இவர்களுக்கான தடுப்புக்காவல் கோப்புக்கள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு, இவர்களைத் தடுத்து வைக்கப்பட்ட அகதிகள் என்று பெயரிட்டு அழைத்தனர். இரண்டாம் உலகப் போர்முடிந்த பின்னர்1945 ஆம் ஆண்டு கனடா இவர்களுக்கு கனடிய குடிமக்களாக வரும் ஒரு வாய்ப்பை அளித்தது.

இந்த வாய்ப்பை ஏற்று 972 பேர் கனடிய குடியுரிமையை பெற்றனர். பின்னாட்களில் இவர்களில் பலர் கனடாவின் கல்வித்துறையிலும், மற்ற துறைகளிலும் முத்திரை பதித்து மிகச் சிறப்பான நிலைக்கு உயர்ந்தார்கள் என்பதை இங்கு சொல்லியே ஆகவேண்டும்.

1942 ஆம் ஆண்டு கனடாவிலே ஏற்கனவே வாழ்ந்து வந்த ஜப்பானிய கனடிய மக்களுக்கும் ஒரு பெரிய அவலம் கனடிய மண்ணிலே நிகழ்ந்தது. தாங்கள் வாழ்ந்த கனடிய மண்ணிலே அவர்கள் அகதிகளாக்கப்பட்ட சோகக் கதை அது.

இவர்களுக்கு நடந்த சோக வரலாற்றைப் பார்ப்பதற்கு முன் இவர்களை அந்நிலைக்கு ஆளாக்கிய இரண்டாம் உலகப்போரின் ஒரு சில வரலாற்றுச் சம்பவங்களை வாசகர்களுடன் பகிர்வது இந்நேரம் பொருத்தமாக இருக்கும் என நான் எண்ணுகின்றேன்.

இருபதாம் நூற்றாண்டிலே ஏன் நவீன மனிதகுல வரலாற்றிலே இவ் உலகத்தைப் புரட்டிப் போட்ட ஒரு முக்கிய நிகழ்வு இரண்டாம் உலகப் போர் என்று எங்கள் எல்லோருக்கும் தெரியும்.

இந்த இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் முக்கூட்டு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டு, தங்கள் போர் நடவடிக்கைகளில் மிக மும்மரமாக இறங்கின.

போரின் ஆரம்ப ஆண்டுகளில் இந்நாடுகளின் படைபலம் சக்தி வாய்ந்ததாக இருந்தது. இதனால் இவர்கள் படையெடுத்த பல நாடுகளை இவர்கள் எளிதாக வெற்றி கொண்டு கைப்பற்றவும் முடிந்தது. இக்கூட்டமைப்பின் ஒரு பங்காளியான ஜப்பான் தனது பெரும்பாலான போர் நடவடிக்கைகளை ஆசிய கண்டத்தை மையப்படுத்தியே வைத்திருந்தது. அந்நேரத்திலே அது ஆசியாவின் ஜாம்பவானாகவும் விளங்கியது.

ஆனால் இப்போக்கிலிருந்து வேறுபட்டு ஜப்பான் 1941 ஆம் ஆண்டு மார்கழி மாதம் அமெரிக்க துறைமுகம் ஒன்றில் நடாத்திய ஒரு தாக்குதல் இரண்டாம் உலகப் போரின் தலைவிதியையயே முற்றிலும் மாற்றியது. 1941 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 7ம் திகதி அமெரிக்கத் துறைமுகங்களில் ஒன்றான பேள் துறைமுகத்தில் ஜப்பான் நடாத்திய தாக்குதல்தான் அது.

இந்த தாக்குதல்தான் கனடிய ஜப்பான் மக்களை தாங்கள் வாழ்ந்த மண்ணிலே அகதிகளாகவும் தடுப்புக் காவல் கைதிகளாகவும் மாற வைத்தது. அது எப்படி நிகழ்ந்தது அவர்களுக்குகனடாவில் ஏற்பட்ட சோக வரலாறு என்ன என்பதை அடுத்த இதழில் விரிவாகப் பார்ப்போம்.







வேதநாயகி

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் என்பது உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது. உலக நாடுகளின் தலைமைத்துவமாகத் தன்னைக் கருதும் அமெரிக்காவின் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்வு உலகின் பெரிய, சிறிய சகல நாடுகளையும் பாதிக்கும் என்பதால் அது தொடர்பில் உலகளாவிய கவனம் குவிவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. உலக பொருளாதாரம், அரசியல் என்பவற்றில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு தனி மனிதரைத் தெரிவு செய்யும் நிகழ்வு முக்கியமானது தான். ஜனாதிபதி ஒபாமாவை பெரியளவில் ஆதரித்த பல தரப்பினரும் அவர்மேல் அதிக அதிருப்தியைக் கொண்டிருக்கிறார்கள். அவரால் எதையுமே சாதிக்க முடியவில்லை என்பது போல் தோன்றுகிறது. பெரிய மாற்றம் என்று கூக்குரலிட்ட ஒபாமா பதவிக்கு வந்து இரண்டு தவணைகளின் பின்னர், ஏற்பட்ட ஒரே மாற்றம் அவரின் முகத்திலும் தலைமுடியிலும் முதுமை தெரிவது மட்டும் தான் என்று அமெரிக்காவின் பிரபல அரசியல் நையாண்டி தொலைகாட்சி நிகழ்ச்சியொன்று (Daily Show) குறிப்பிட்டிருந்தது. சகலருக்குமான சுகாதாரக் காப்புறுதி, சட்டத்துக்குப் புறம்பாக நாட்டில் தங்யிருக்கும் மில்லியன் கணக்கான குடிவரவாளர்களுக்கு வதிவிட உரிமை போன்ற சில விடயங்களில் முக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்திருந்தாலும், துப்பாக்கி வைத்திருப்பதற்கான பொதுமக்களின் உரிமையை மட்டுப்படுத்துதல் போன்ற விஷயங்களில் முயன்றும் முக்கியமான மாற்றங்களை ஒபாமாவால் கொண்டு வர முடியாமல் போனது. ஒபாமா பற்றிய பல விமர்சனங்களின் மத்தியிலும், ஒபாமாவின் சாதனை என்ன என்பதை தற்போது தேர்தலில் போட்டியிடுவதற்காக களமிறங்கியுள்ள ஒருசில போட்டியாளர்களினைப் பார்த்தால் புரிந்துவிடும். அவர்களைப் போல இல்லாமல் இருப்பதே ஒபாமாவின் ஒரு சாதனைதான். ஏனெனில் தேர்தல் பிரச்சாரத்துக்குப பணம் கொடுப்பவர்களால் தான் அமெரிக்க தேர்தல் தீர்மானிக்கப்படுகிறது. பணம் கொடுக்கக்கூடியவர்களால் தான் அமெரிக்க ஜனாதிபதியால் என்ன செய்ய முடியும் என்பதும் தீர்மானிக்கப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதியாகக் கடவுளை நியமித்தாலும்கூட அவரால் பெரிதாக எதையும் சாதித்துவிட முடியாது!

இரண்டு முறைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் நிற்பதற்கு அமெரிக்க அரசியல் யாப்பில் இடம் இல்லாததால் 2016 இல் புதிய ஒரு ஜனாதிபதி பதாவியேற்கப்போவது உறுதி. அது யார் என்பதற்கான பந்தயமும் போட்டியும் காரசாரமாக ஏற்கனவே ஆரம்பித்து விட்டன. ஒபாமாவின் கட்சியான ஜனநாயகக் கட்சியிலிருந்து முக்கியமாக மூன்று வேட்பாளர்கள் தேர்தல்களத்தில் இறங்கியுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நான்கு வருடங்களுக்கொருமுறை நடைபெறுகிறது. 2012 இல் இடம் பெற்ற இறுதியாக நடந்த தேர்தலில் ஏலவே ஜனாதிபதியாக இருந்த ஒபாமாவுக்கு பலத்த எதிர்ப்புக்கள் எதுவும் இல்லாத காரணத்தினால் பெரிதும் சூடு பிடிக்காத விவகாரமாக அது நடந்து முடிந்து விட்டது. அதற்கு முன்னர் 2008இல் நடந்த தேர்தல் மிகவும் அதிக எதிர்பார்ப்புக்களுக்கும் உலகளாவிய கவனத்துக்குமுரியதாக இருந்தது. முதன் முதாலாக ஒரு கறுப்பினத்தவரை ஜனாதிபதியாக்கிய தேர்தல் என்ற வகையில் அது முக்கியத்துவம் பெற்றது. இன்னுமொரு முக்கியமான விடயம் என்னவென்றால், 1776ம் ஆண்டு அமெரிக்க ஆங்கிலேயரின் அதிகாரத்திலிருந்து தன்னைத்தானே சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டதிலிருந்து இன்று வரை ஒரு பெண் ஜனாதிபதியாக பதவியேற்றதில்லை. 2008ம் ஆண்டுத் தேர்தலில் ஒபாமாவுக்கு அடுத்த படியாக பலரதும் கவனத்தையும் ஆதரவையும் பெற்ற போட்டியாளர் ஒரு பெண். அவர் தான் ஹிலரி கிளிண்டன். இம்முறை ஒபாமாவின் காலம் முடிகையில் அவர் மீண்டும் களமிறங்குகிறார். ஒபாமாவின் கட்சியான ஜனநாயகக் கட்சியின் மூன்று வேட்பாளர்களில் இவர் மிக முக்கியமானவர். தேர்தல் பிரச்சாரத்திக்கான நிதி திரட்டலில் இவர் இம்முறை முன்னணியில் நிற்கிறார். ஏற்கனவே மக்கள் மத்தியில் அறியப்பட்ட இவருக்கு கணிசமானளவு வெற்றி வாய்ப்புக்கள் உண்டு என்றே கூறலாம். ஆயினும் அமெரிக்கத் தேர்தல் ஒரு வருடகால தொடர் பயணம். எங்கும் எவரும் சறுக்கி விழலாம், எதிர்பாரதவைகள் நடைபெறுவதும் எதிர்பார்க்கப்பட வேண்டியதுதான். ஜனநாயகக் கட்சியிலிருந்து போட்டியிடும் மற்றைய இரு போட்டியாளர்களும் பெர்னி சண்டர்ஸ் மற்றும் மார்டின் ஒமேல்லி ஆவர்.

அதிக கவனம் பெற்றிருக்கும், பரபரப்பாக விளம்பரமின்றி சகலராலும் தெரியப்படும் முக்கியமான வேட்பாளர்கள் யார் என்பதைப் பார்க்கலாம். குடியரசுக்கட்சியும் ஜனநாயகக் கட்சியும் அமெரிக்காவின் இருபிரதான கட்சிகளாகும். இதில் ஒபாமா ஜனநாயகக் கட்சிக்காரர் என்பதால் குடியரசுக்கட்சியில் புதிய தேர்தல் வேட்பாளர்களின் பிரச்சாரம் மிகச் சூடாக இருக்கிறது. மக்களிடம் மாற்றத்துக்கான தாகம் இருக்கும், அல்லது அதை ஏற்படுத்த முடியும். இதனால் அதிகம் பயனடையப் போவது எதிர்க்கட்சியே. எனவே, குடியரசுக் கட்சி வேட்பாளர்கள் ஒன்பது பேர் அமெரிக்காவின் தற்போதைய துயர நிலையைப் பாடியபடி களத்தில் குதித்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சொல்லும் ஒரே தராக மந்திரம் அமெரிக்கா ஆபத்தான நிலையில் இருக்கிறது. கீழே விழுந்து கொண்டிருக்கிறது என்பதாகும். முக்கியமாக உலக இஸ்லாமிய தீவிரவாதம் இங்கு அதிகம் அடிபடும் தேர்தல் பிரச்சனையாகிவிட்டது. இந்த வேட்பாளர்களில் ஒரே ஒரு பெண் கார்லி பியோரினா என்பவராவார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலையே ஒரு செய்தியாக்கிய பெருமை இவர்களில் ஒருவரான டொனல்ட் ட்ரம்ப் இனைச் சாரும். ஆம், தேர்தல் பிரசாரத்துக்காக மிகக் குறைந்தளவில் செலவிடாமல் மிக அதிகளவில் இணையம், வெகுஜன ஊடகங்கள் என்பவற்றில் வைரசாக பரவிவரும் பெயர் அவருடையது. அதற்கான காரணங்களில் ஒன்று அவருடைய முட்டாள்தனம், அடுத்தது அவரது இனவாதம். பாரிஸ் தாக்குதல்கள் உலகையே உலுப்பிய போது, அமெரிக்காவைப் பயங்கரவாதத்திடம் இருந்து பாதுகாப்பதற்காக முஸ்லிம்களை அமெரிக்காவுக்குள் அனுமதிப்பதை முழுமையாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று ட்றம்ப் வாதிட்டார். அமெரிக்கா 10 ஆயிரம் சிரிய அகதிகளை ஏற்றுக் கொள்வதாக ஒத்துக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது கருத்துக்கள் எந்த விதமான விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களும் அற்றவை. நகைப்புக்கிடமானவை. ஆனால் அவை ஆபத்தானவையும் கூட. ட்றம்ப் பெற்றுள்ள குறிப்பிடத்தக்களவு ஆதரவு அந்த ஆபத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. அரசியல் அறிவு இல்லாத அதே நேரம் இஸ்லாமியர்களை எதிர்க்கின்ற, இஸ்லாம் என்பது ஒரு மிக வன்முறையான மதம் என்பதை நம்புகின்ற அமெரிக்கர்கள் பலர் இவரை ஆதரிக்கின்றார்கள். இவரது கருத்துக்களை நம்புகின்றார்கள். அமெரிக்க மக்களிடையே தூங்கிஇருக்கும் ஒரு இஸ்லாமிய வெறுப்புணர்வையும் மதவாதத்தையும் பயங்கரவாதம் என்கிற பயத்தை ஊட்டித் தட்டி எழுப்புகிற வேலையை ட்ரம்ப் செய்து வருகிறார். இறுதியாக இவர் கூறியிருக்கும் கருத்து மிஷிமிஷி தீவிரவாதிகள் இணையம் மூலம் ஆட்சேர்ப்பதைத் தடுக்கவேண்டும் என்பது. அமெரிக்கர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இணையதத்தள வசதிகளை அவர்கள் எப்படிப் பாவிக்கலாம் என்று சீறும் ட்ரம்ப், எமது நாட்டின் மிகச் சிறந்த புத்திசாலிகளைக் கொண்டு அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சூளுரைத்திருக்கிறார்.

இஸ்லாமியர்களுக்கு எதிரான கருத்துக்களைக் கூறிவரும் ட்ரம்ப் இற்கு பலத்த எதிப்புகள் கிண்டலாகவும் கேலியாகவும் கோபமாகவும் வெளிவந்த வண்ணமே உள்ளன. ஆனால் அவை அனைத்தும் அவரை மட்டும் ஒரு மதவாதியாக்கிச் சாடுபவையாகவே உள்ளன. உண்மையில் அவரால் அந்தக் கருத்துக்களை வெற்றிகரமாகச் சொல்ல முடிவதற்குக் காரணமாக இருக்கும் அமெரிக்காவில் ஊடுருவியிருக்கும் இஸ்லாமிய வெறுப்புணர்வும் அதைக் களைவதற்கான சமூக ரீதியான வழிமுறைகளும் என்ன என்று தேடுவதே மேலும் சிறந்த வழியாய் இருக்கும். ட்ரம்ப் ஒரு பண முதலாளி. மத்திய கிழக்கு உட்பட பல நாடுகளில் அவருக்கு முதலீடுகளும் வியாபாரத் தொடர்புகளும் உண்டு.

இவரைவிட குடியரசுக்கட்சியில் இருக்கும் ஏனைய வேட்பாளர்கள் எவருமே சளைத்தவர்கள் அல்லர். அமெரிக்காவை இராணுவ ரீதியாகப் பலமாக்குவதும் ரஷ்ய, சீனா உட்பட சகல பலம் வாய்ந்த நாடுகளையும் எதிர்ப்பதும் இவர்களின் பெரும்பாலானோரின் ஒத்த குரலிலான மந்திரமாக இருக்கிறது. அமெரிக்காவை அதன் பழைய உயர்ந்த நிலைக்கு மீட்டுச் செல்லப் போவதாக இவர்களில் பலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். இஸ்லாமிய எதிர்ப்பும் அகதிகள் மற்றும் குடியேற்ற வாசிகளை உள்வாங்குவதை எதிர்ப்பதும் இவர்களின் முக்கிய பிரச்சாரக் கருத்து நிலைகளுள் முக்கியமானவை. இவர்களில் வெற்றி வாய்ப்பு ரீதிரில் பார்த்தால் டெட் க்ரூஸ் மற்றும் மார்க்கோ ரூபியோவை மட்டுமே சொல்லலாம் ஆனால் மொத்தம் 9 பேரும் தமது தீவிரமான அல்லது முட்டாள்தனமான கருத்துக்களால் பரவலாக அறியப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக பென் கார்சன் எனும் கறுப்பின ஓய்வுபெற்ற நரம்பியல் நிபுணரான போட்டியாளர் அண்மையில் அமெரிக்காவின் கனடா எல்லை முழுவதும் இராணுவ பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்று கூறியதன் மூலம் கனடிய பத்திரிகைகளில் இடம் பிடித்தார். சிரிய அகதிகள் அதிகளவில் கனடாவுக்கு வந்து இறங்க ஆரம்பிக்கும் வேளையில் இந்தக் கருத்து வந்தமை ஒரு சலனத்தை ஏற்படுத்தும் விடயமாக அமைந்தது. இதைத் தவிர, எந்தவிதமான தகவல் அல்லது தரவு ரீதியான ஆதாரத்தையும் முன்வைக்காமல் இஸ்லாமிய அகதிகள் தீவிரவாதிகள் போன்ற கருத்துக்களைப பரப்பி வருகின்றார்கள்.



மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் டிசம்பர் 15ம் திகதி லாஸ் வேகாஸ் இல் நடைபெற்ற குடியரசுக்கட்சி வேட்பாளர்கள் விவாத்தத்தில் தெரிவிக்கப்பட்டன. அடுத்து என்ன நடக்கும், எவ்வாறெல்லாம் பிரச்சாரங்கள் பொதுமக்களின் கருத்தை மாற்றியமைக்கும் என்பதை பொறுத்திருந்து தான் அவதானிக்க வேண்டும். 2016 என்பது ஊடகவியலாளர்களுக்கும் உலக அரசியல் அவதானிகளுக்கும் மிக பரபரப்பான காலமாகத் தான் இருக்கும்.


Dr. Chandra
KC Dental
COMING
SOON
KC Dental
Dr. Chandra is moving from Markham/Steeles
Location to Ajax in December 2015
Right Here at Salem/Rossland Next to Esso Gas Station
Tel: 905 683 0505
Mobile: 416 700 0101
290 Rossland Road East, Ajax (Rossland/Salem) (Opposite to Canbe Restaurant)
www.drchandradental.com
Email: drkanchandra@gmail.com

11ஆவது ஆண்டில் Project Engagement



வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து

- திருவள்ளுவர்

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்து கொடுக்கும் தன்மை உடையது.



புத்தாண்டும் திருப்பிறப்பும் இணைந்த காலம் உலகமே கொண்டாடும் விடுமுறை காலமாக மாறியிருக்கிறது. மதம், மொழி, நாடு போன்ற அடையாளங்களைத் தாண்டி பன்னாட்டு மக்களும் மகிழ்ந்து கொண்டாடும் காலம் இது. அன்பு, அறம், ஈகையின் வழிகாட்டிய இயேசுவின் பிறந்த நாளையும் தொடர்ந்து வரும் புத்தாண்டின் புதிய நம்பிக்கையாகவும் இக் கொண்டாட்டங்கள் அமைகின்றன.

கொண்டாட்டங்கள் எந்த வகையானாலும் பரிசுப் பொருட்களும் அன்பளிப்புகளும் இன்றியமையாத ஒன்றாகின்றன. பொதுவாக அன்பைப் பகிர்ந்து கொள்ளவும் உறவுகளின் தேவையறிந்து உதவிடவும் இவை முக்கியம் பெறுகின்றன. இருந்தும் இன்றைய பொருள்சார் உலகில் அன்பளிப்புகள் தவிர்க்க முடியாத திணிப்பாகி நிற்கின்றன.

"வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்து கொடுக்கும் தன்மை உடையது." என்றார் பொய்யாமொழிப் புலவர். நாம் அறியாதோருக்கும் நம்மை அறியாதோருக்கும் எனப் பலர் தேவைகளோடும் இடரோடும் மேலை நாடுகளிலும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இத்தகைய தேவைகளோடு தமிழ்க் குடும்பங்கள் பலவும் கனடாவில் வாழ்ந்து வருகின்றன.

குமுகத்தின் இத்தகைய தேவைகளைச் சந்திக்கும் பொருட்டும் ஈகை உணர்வை மேம்படுத்தும் நோக்கிலும் 11 ஆண்டுகளுக்கு முன் ரொறன்ரோ மாநகர சபை உறுப்பினரும் நகரின் பொருளாதார மேம்பாட்டுத் தலைவருமான திரு. மைக்கல் தொம்சன் அவர்கள் "Project Engagement" எனும் செயற் திட்டத்தை உருவாக்கினார். திரு. வின்சன்ற் ககபரோ அவர்களும் இத்திட்டத்தை உருவாக்க திரு. மைக்கல் தொம்சன் அவர்களுடன் இணைந்த செயற்பட்டார். இத்தகைய சிந்தையுள்ள பலர் இணைத்து மிகச் சிறிய அளவில் உருவான இத் திட்டம் இன்று 400 குடும்பங்களுக்கு நான்கு முதல் ஆறு கிழமைகளுக்குப் போதுமான தரமான உணவுப் பொருட்களை இந்த விடுமுறை நாட்களில் வழங்கும் திட்டமாக வளர்ந்துள்ளது.

உலகம் முழுவதும் கொண்டாட்டங்களில் திளைத்திருக்கும் வேளையில் கனடா போன்றதொரு வளர்ச்சியடைந்த நாட்டில்வறுமையைத் தற்காலிகமாக ஒழித்தலே இத்திட்டத்தின் குறுகிய கால நோக்கமாகும். வறுமையற்ற ஒரு நாட்டை உருவாக்கலே Project Engagement இன் நீண்டகால நோக்கமாகும். இத் திட்டம் ஆண்டுதோறும் கண்டுவரும் வளர்ச்சியும்இத்தகைய இலக்குடன் பல அமைப்புகள் செயற்பட்டு வருவதும் வறுமையற்ற கனடாவை உருவாக்கும் என நம்பலாம்.

கடந்த செவ்வாய்கிழமை டிசம்பர்த் திங்கள் 22ஆம் நாள் ஸ்காபரோவில் அமைந்துள்ள எல்ஸ்மெயர் குமுக நடுவத்தில் அதிகாலை 5:00 மணியளவில் இந்த வழங்கல் நிகழ்வு தொடங்கியது. ஒரு மாத காலமாக இடம்பெற்ற முன்னேற்பாடுகளைத் தொடர்ந்து பொதியிடுதல் மற்றும் வழங்குதல் ஆகியவை அங்கு இடம் பெற்றன. முதியோர், இளையோர் மற்றும் குழந்தைகள் என நானுலீறுக்கும் மேற்பட்ட பல்லினத் தொண்டர்கள் உற்சாகத்தோடும் மகிழ்வோடும் நிகழ்விற் கலந்து கொண்டனர். இதுமான காலநிலை அணி சேர்க்க 400 பொதிகளும் வினியோகிக்கப்பட்ட நிலையில் மாலை 2:00 மணியளவில் நிறைவுக்கு வந்தது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஆறு உணவுப் பொதிகள் அவர்களது வீடுகளுக்கே எடுத்துச் சென்று வழங்கப்பட்டன. தமிழர் உட்பட்ட பல உள்ளனர் வணிக நிறுவனங்கள் மற்றும் கொடையாளர் இப் பொருட்களை வழங்கியிருந்தனர். ரொறன்ரோப் பெரும்பாகத்தின் பல பகுதிகளிலும் தேவையுடன் வாழும் பல்லினத்தையும் சேந்த குடும்பங்கள்இச்செயற்திட்டத்தின் மூலம் பயன் பெற்றனர். பயன் பெற்ற குடும்பங்களில் இம்முறை ஏழு தமிழ்க் குடும்பங்களும் அடங்குவர்.

பல தமிழ் மக்கள் தன்னார்வத் தொண்டர்களாகக் கலந்து பணிகளில் ஈடுபட்டனர். இவர்களில் அகவை பத்தொன்பதான செல்வன். கௌரிசங்கரும் அடங்குவார். இத்திட்டத்திற் பங்கேற்பது இதுவே இவருக்கு முதற் தடவை. "கனடாவில் அதுவும் ரொறன்ரோ மாநகரில் இத்தனை மக்கள் உணவுத் தேவைகளைச் சந்திக்க முடியாதிருப்பது வேதனை தருகிறது. அதேவேளை தாம் அறியாதோரின் தேவையிற் சிறிதையேனும் மகிழ்ச்சியோடு நிறைவேற்ற இத்தனை பேர் இணைந்திருப்பது மகிழ்ச்சியும் நம்பிக்கையும் தருகிறது" எனக் குறிப்பிட்டார் செல்வன் கௌரிசங்கர்.

அரசியற் தலைவர்கள், பிரபலங்கள், தொண்டு நிறுவனங்கள், குமுக அமைப்புகள் எனப் பலதரப்பட்ட மக்களும் இச் செயற் திட்டத்தில் இணைந்து பணியாற்றினர். தமிழ்க் குமுகத்தின் சார்பிற் கனடியத் தமிழர் பேரவை கடந்த ஐந்து ஆண்டுகளாக இத் திட்டத்தில் இணைந்து செயற்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு இத் திட்டத்திற்கான பங்களிப்பை மேலும் அதிகரிக்க உள்ளதாக கனடியத் தமிழர் பேரவையின் தலைவர் திரு. இராச் தவரட்ணசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாண்டின் நிர்வாக ஒழுங்கமைபைப் பொறுப்பேற்று நடத்திய திரு. பிராங் பேணாடோ சிட்டியோ அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "ஒவ்வொரு ஆண்டும் பயன் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு பங்கேற்பாளரின் எண்ணிக்கையும் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவும் அதிகரித்த வண்ணம் உள்ளதாகக் குறிப்பிட்டார். மேலும் அதிக குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில் இத்திட்டம் பன்மடங்கு வளரும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த நாடுகளிற் பசி மற்றும் வறுமை இன்றும் ஒரு சிக்கலாகவும் தீர்வு காணப்படாமலும் உள்ளது. வளர்ந்து வரும் மற்றும் வறிய நாடுகளின் நிலை பற்றிக்குறிப்பிடவேண்டிய அவசியமேயில்லை. உலகமயப்படுத்தப்பட்ட நவீன வாழ்வில் அடிப்படைத் தேவைகளே சந்திக்கப்படாமல் நம்மைச் சுற்றி மனிதர்கள் வாழ்கிறார்கள். பொருளாதார சமநிலை எட்டப்படும் வரை இத்தகைய தேவைகளைச் சந்திக்கும் "Project Engagement" போன்ற முன்னெடுப்புக்கள் அவசியமாதாகவே அமையும். தனியொருவனுக்கு உணவு இல்லா நிலை நீங்கும் நாள் உலகின் நன்னாளாகும்.







நீர் வழிந்தோட முடியாத பாலம்

தீபம் டெலஸ்கோப்

பாலம் கட்டுவது நீர் வழிந்தோட என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் நீர் வழிந்தோட முடியாத பாலமும் கட்டப்பட்டுள்ளது என்பதை அறிந்திருக்கிறீர்களா?. அப்படியொரு அதிசயம் யாழ் கலட்டி சேர் பொன் இராமநாதன் வீதியில் கட்டப்படுகிறது.

பாலம் அமைக்கப்பட்டும், நீர் வழிந்தோட முடியாமல், இந்தப் பகுதியில் நீர் தேங்கி நிற்கிறது. எதிர்காலத்தில் இந்த வீதியை பயன்படுத்த முடியாமல் மூடும் அபாயம் ஏற்படும் என்றும் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தீர்க்கமான முடிவுகளை எடுக்க முடியவில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு பாலம் கட்டப்படுகிறது. அந்தப் பாலம் நீர் வடிந்தோடக் கூடியவாறு அமைக்கவில்லை என்பதே மக்களை பலவாறாக சந்தேகம் கொள்ள வைத்துள்ளது. 'ஒதுக்கப்பட்ட நிதியில் முறையாக பாலம் கட்டவில்லையென்றால், ஏதோ வில்லங்கம் இருக்க வேண்டும்' என்று அந்தப்பகுதி மக்கள் முணுமுணுப்பதை காது கொடுத்து கேட்க முடிகிறது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் 'கிராமத்துக்கு ஒரு மில்லியன்' திட்ட ஒதுக்கீட்டில், இந்தப்பகுதியில் தேங்கும் நீரை வெளியேற்றும் திட்டத்துக்கு அனுமதிகிடைத்தது. அப்படி ஆரம்பிக்கப்பட்ட திட்டமே சர்ச்சைகளை விலைகொடுத்து வாங்கியுள்ளது. நீரை வெளியேற்றும் முறைப்படியான திட்டம் எதுவும் அதிகாரிகளிடமில்லையென்பது மக்களின் குற்றச்சாட்டு.

இந்தப் பாலத்துக்கு அருகில் ஆனந்த குமாரசாமி பெண்கள் விடுதி அமைந்துள்ளது. இந்த விடுதியே குளத்துக்கு மேல்தான் கட்டப்பட்டுள்ளது. குளம் ஒன்று மூடப்பட்டதால் நீர் வழிந்தோட முடியாது இந்தப் பகுதியில் தேங்கி நிற்கிறது. குளப்பகுதிக்கு நீர் வழிந்தோடி வரும் என்பது இயற்கைவிதி. குளம் மூடப்பட்டால் அங்கு தண்ணீர் தேங்குமென்பதும் சாதாரண அறிவுக்கு தெரியும். இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்தே பாலம் கட்ட வேண்டும்.

நீரை வெளியேற்ற எல்லா பக்கத்தாலும் வாய்க்கால்களை அமைத்துப் பார்த்தனர் ஆனால் நீரை வெளியேற்ற முடியவில்லை. ஒவ்வொரு வாய்க்காலாய் மூடி மூடி இப்பொழுது அந்த வீதிக்கு குறுக்கே புதிதாக பாலம் அமைக்கப்படுகிறது. அதன் அருகே புதிதாக வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாய்க்காலாலும் நீர் வடிந்தோட முடியாது என்பது மக்களின் குற்றச்சாட்டு.





35 ஆண்டுகளாக நீரை வழிந்தோடவைப்பதற்கான முயற்சிகளை பொறியியலாளர்கள் மேற்கொண்டும் முடியாமல் போயுள்ளது. வழிவாய்க்கால் உயரமாக இருந்தால் மட்டுமே நீர் வழிந்தோட முடியும். தாழ்வுப் பகுதியில் இருந்து நீரை வழிந்தோட விட முடியாது. கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில் குளம் நிரம்பி வழிந்தால் அந்த நீரும் இங்கே தான் ஓடி வரும்.

இந்த நீரை வழிந்தோட விடுவதற்காக கச்சேரியால் 8 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. மொத்தமாக 1.8 மில்லியன் இந்த திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டது. வழிவாய்க்கால் கட்டி கட்டி மூடவே இந்த நிதி முடிவடைந்து விடும். பிறகு எங்கே நிதி மிஞ்சப் போகிறது. வெட்டப்படும் மண் ஒரு பக்கத்தால் விற்கப்படுகிறது. பாலத்துக்கு அருகில் மண் போட்டு நிரவாததால் ஒரு ரைக்டர் புதைந்து நிற்பதை படத்தில் காணலாம்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் தினமும் சென்று வரும் முக்கிய வீதி இது. திட்டமில்லாமல் பகுதி பகுதியாக கட்டப்படுவதால்; பிரயாணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். யாழ் மாநகரசபையின் தோல்வித் திட்டம் இதுவாகும்.

மாநகர சபையில் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் இந்த பாலம் கட்டும் வேலையைப் பற்றிக் கேட்டால் ஒன்றுமே சொல்ல மாட்டாவாம். ஏனெனில் எத்தனை பொறியியலாளர்கள் வந்து பார்த்து விட்டு தங்களால் முடியாத காரியம் என்று சொல்லிவிட்டுப் போன இந்த வேலைத் திட்டத்தைப் பற்றி இவரால் என்ன சொல்ல முடியும். ஓட முடியாது பாலத்திற்குள் நீர் தேங்கி நின்று டெங்கு மாதிரியான தொற்றுக்களை ஏற்படுத்துமே தவிர இந்தப் பாலத்தால் நீரை வெளியேற்ற முடியாது.

ஒருகல்விமானின் பெயரை இந்த வீதிக்கு வைத்துவிட்டு கொஞ்சமும் யோசிக்காமல் செயற்படலாமா என்பதே பிரயாணிகயளின் முணுமுணுப்பு. வீதியின் தொடக்கமான யாழ் பரமேஸ்வராச் சந்தியில் ஒரு மேல் மாடிக் கட்டடம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் உடைக்கச் சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கட்டடம் கட்டும் வரை சபை என்ன செய்து கொண்டிருந்தது? இப்படியான அசமந்தங்கள்தான் மக்கள் மத்தியில் சந்தேகங்களை எழுப்புவது. ஏனெனில், அந்த கட்டிட விவகாரத்தில் 'சம்திங்' இருப்பதாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இந்தவீதியின்பெயர்சேர்பொன் இராமநாதன் வீதியாக இருந்தாலும் நாச்சிமார் கோயில் வீதி என்றுதான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மாநகரசபை இந்த வீதியின் பெயரை பதிவு செய்யவில்லை. இப்படியாக இந்த வீதியின் நிலை பரிதாபகரமாக இருக்கிறது.

பாலத்தில் நீர் தேங்கி இருந்து நுளம்பு பெருகினால் அதிகம் பாதிக்கப்படப்போவது விடுதியில் உள்ள யாழ் பல்கலைக்கழக மாணவிகள்தான். மழை நாட்களில் முழங்காலுக்கு மேல் வெள;ளம் நிற்கும். விடுதி மாணவிகள் வெள்ளத்துக்குள்ளால் நடந்துதான் செல்ல வேண்டியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதி பற்றி கவனம் எடுக்க வேண்டும்.



உங்கள் பாதங்கள் பத்திரம்

பெண்கள் பலர் முகத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கால்களுக்கு கொடுப்பதில்லை. ஆனால் அந்த அக்கறையீனம் தான் பித்த வெடிப்பு, முரட்டு தன்மை, தடித்த பாதங்கள் என்பவற்றை ஏற்படுத்தி அழகின் பாதியை பறித்து விடுகின்றன. எனவே உங்கள் அழகின் பாதி உங்கள் பாதங்களிலும். செருப்பை தேடி தேடி வாங்கும் நாம் அதற்கு ஏற்றால் போல் எங்கள் பாதங்களையும் பராமரிக்க வேண்டும். உங்கள் பாதங்களை பத்திரமாக பாதுகாக்க சில வழிகள் உங்களுக்காக....

1 மிதமான சுடுதண்ணீரில் சிறிதளவு சம்போ சிறிது உப்பு பாதி தேசிக்காய் சாறு என்பவற்றை கலந்து அந்த தண்ணீரில் பாதங்களை 10 நிமிடம் ஊறவைக்கவும். பின்னர் பாதங்களுக்கென்று விற்பனையாகும் விற்றமின் ஈ உள்ளடங்கிய கிறீம்களை தடவி மசாஜ் பண்ணி கொள்ளலாம். இது ஆண்களுக்கும் பொருந்தும்.

2 வெட்டப்படாமல் இருக்கும் பாத நகங்களால் இடறுகள் பல. எனவே கட்டர் கொண்டு நகங்களை முழுமையாக வெட்டுவது நன்று. இல்லை நகம் இருப்பதுதான் பிடிக்கும் என்றால் ஓரளவு வெட்டி சேப் பண்ணி விடவேண்டும்.

3 ஒலிவொயில் எண்ணெயை தடவி மசாஜ் செய்து வர பாதங்களில் ஏற்படும் பித்த வெடிப்பு குணமாகும்.

4 வெடிப்புள்ள பகுதியில் எழுந்து நடக்கும் போது வலி இருந்தால் இரவில் படுக்கும் முன்னர் பாமசிகளில் பித்த வெடிப்புக்காக விற்கும் தைலத்தை வாங்கி பூசிவிட்டு தூங்குங்கள். இதனால் வலி போவது மட்டுமின்றி விரைவில் வெடிப்பையும் மாற்ற முடியும்.

5 தினமும் குளிக்கும் போது தரையில் அல்லது தோய்க்கும் கல்லில் பாதங்களை மென்மையாக தேய்த்து குளியுங்கள். அல்லது அழகு நிலையங்களில் கிடைக்கும் அழுக்கு நீக்கும் கல்லையும் பாவிக்கலாம்.

6 ஈரமான பாதத்தை சோப்பின் நுரையுடன் கல்லில் தேய்த்து கொள்ளுங்கள். பின்னர் கஸ்தூரி மஞ்சள் அல்லது சமையலுக்கு பயன்படுத்தும் மஞ்சளை தடவி வந்தால் வெடிப்பு குணமாகும்.

7 வெவெடிப்புள்ள பாதங்களை ஐஸ்கட்டியில் சிறு நேரம் ஊற வைத்து பின்னர் சந்தன தூளை பூசி 10 நிமிடங்கள் கழித்து பாதங்களை அலசவும். இது போல் செய்து வந்தால் வெடிப்பு சரியாகும்.

8 கடுகு எண்ணெயை வாங்கி சூடாக்கி பாதங்களில் தடவி மசாஜ் செய்து வந்தால் பாதங்கள் அழகாவதுடன் கால் வலி உள்ளவர்களுக்கு கால் வலி நீங்கும்.

9 நகப் பூச்சு உபயோகிப்பவர்கள் வாரம் ஒரு முறை நகங்களில் உள்ள நகப்பூச்சுக்களை நீக்கி சுத்தம் செய்த விட்டு ஒரு நாள் முழுவதும் நகப்பூச்சை பூசாமல் இருப்பது அவசியம். இப்படி செய்வது நகங்களுக்கு நல்லது.

10 தண்ணீரில் றோஜா இதழ்கள் தேசிப்பழ சாறு வேப்பிலை ஆகியவற்றை சேர்த்து சூடுபடுத்த வேண்டும். பின்னர் சுட வைத்த நீரை அற வைத்து மிதமான சூட்டில் கால்களை 20 நிமிடம் வைத்திருக்க வேண்டும். இது போல் செய்து வந்தால் கால்கள் சொர சொரப்பு இன்றி மிருதுவாகும்.

பிள்ளைகளின் மலச்சிக்கலுக்கு காரணம்

உங்கள் பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கலாம். பெரியவர்களாக இருக்கலாம். மலச்சிக்கலில் அவதியுறுகிறார்களா. உடனடியாக மாத்த முயற்சியுங்கள். சிறு பிரச்சினையான இதனால் பல்வேறுபட்ட சிக்கல்களுக்குள்; சிக்கிமுக்காட வேண்டி ஏற்பட்டுவிடும்.

பெருங்குடலின் முக்கிய வேலை போதுமான அளவு நீரை உறிஞ்சி கழிவுகளை திண்மத் தண்மையாக ஆக்கி வெளியேற்றுவது ஆகும். இதில் சிக்கல் ஏற்படும் பொழுது உணவில் விருப்பமின்மை, மலங்கழிக்க அவதியுற்று அழுதல் போன்றன சிறு பிள்ளைகளிடம் அவதானிக்க முடியும். இந்த சிக்கல் ஏற்பட காரணம் தான் என்ன?

1 நார்த்தன்மையான உணவு உட்கொள்ளாமை.
2 தேவையான அளவு நீர் அருந்தாமை.
3 உடற்பயிற்சி இன்மை.
4 உணவுப் பழக்க வழக்கங்களில் ஒழுங்கின்மை.
5 உயிர்ச்சத்து டி குறைபாடு
6 நீண்ட நேரமாக உடலை ஒரே நிலையில் வைத்திருத்தல்.
7 பெருங்குடல் தசைகளில் சக்தி குறைந்து போதல். இப்படியான காரணங்களே இந்த பிரச்சினைக்கு அடிப்படை காரணியாக அமைகின்றது. எனவே இக் காரணிகளில் இருந்து விடுபடும் போது மலச்சிக்களில் இருந்து எம்மை பாதுகாக்க முடியும்.



கொழுப்பைக் குறைக்க உதவும் உணவுகள்

செல்வி துவாரகா கோபிராஜேந்திரன்
வவுனியா

உடல் எடையை அதிகரித்து விட்டு அதைக் குறைக்க முடியாமல் ஜிம், உடல்பயிற்சி, உணவில் கட்டுப்பாட்டுடன் இருப்பது போன்றவற்றை பின்பற்றி வருபவர்கள் ஏராளம். ஏனெனில் தினமும் உடலில் இனிப்பு, உப்பு, புளிப்பு போன்றவற்றை சேர்க்க வேண்டும். மேலும் உடலில் எந்தப் பிரச்சினையும் வராமல் இருக்க சரியான உணவு உண்டு வந்தாலே அதிக உடல்எடையானது குறைந்து விடுவதோடு அரோக்கியமாகவும் வாழலாம்.

மஞ்சள்

மஞ்சளானது ஒரு சிறந்த மருத்துவ குணம் வாய்ந்த பொருள் என்பது அனைவருக்கும் தெரியும். அத்தகைய மஞ்சளை தினமும் உணவில் சேர்த்து வந்தால், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புக்களைக் கரைத்து, அதிக இரத்த அழுத்தம் ஏற்படாமல், இரத்த சுழற்சியானது நன்கு இடம்பெற்று இதய நோய் ஏற்படாமலும் இருக்கும்.

தேன்

இது உடலைக் குறைக்க ஒரு சிறந்த வீட்டு மருந்து. இதனை உண்டால் உடலில் சேரும் கொழுப்புக்களை சாதாரணமாக உடலில் நடைபெறும் செயல்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும். ஆகவே தினமும் ஒரு மேசைக்கரண்டி தேனை சூடான நீரில் கலந்து விடியற்காலை குடிக்க வேண்டும்.

கறிவேப்பிலை

கறிவேப்பிலை உடலில் இருக்கும் கொழுப்பு மற்றும், டொக்ஸின் போன்றவற்றை உடலில் தங்க விடாமல் வெளியேற்றும். மேலும் அதிக எடை உடையவர்கள் தினமும் 8 முதல் 10 கறிவேப்பிலையை வெறும் வயிற்றில் உண்டால் நல்லது. இல்லையென்றால், அதனை அரைத்து தண்ணீரில் கரைத்து குடிக்க வேண்டும்.

பூண்டு

இது கொழுப்பைக் கரைக்கும் ஒரு சிறந்த பொருள் ஏனெனில் இதில் சல்பர் இருக்கிறது. இது ஒரு கிருமிகளை அழிக்கும் பொருளான ஆன்டிபக்டீரியல் இதில் இருப்பதோடு தேவையற்ற கொழுப்புக்களையும் கரைத்து உடலை விரைவாக ஸ்லிம் ஆக மாற்றும்.

மேற்கூறிய இத்தகைய உணவுகளை உண்டாலே உடலானது ஆரோக்கியமாக இருப்பதோடு உடலிலும் எடை கூடாமல் ஆரோக்கியமாக இருக்கலாம்.

இன்று பல பெண்கள் மறந்தே போகும் விடயம் பொட்டு. சின்ன பெண் பிள்ளைகள் கூட பொட்டு வைப்பதில்லை. கேட்டால் அதுதான் ஸ்ரைல். இல்லை ஆ...மறந்துட்டனே.. இப்படி தான் பதில். இன்று பெண்களுக்கு பொட்டு முக்கியத்துவம் அற்றதாக போய்க்கொண்டிருக்கின்றது.

பொட்டு மங்களகரம். இறை வழிபாட்டின் பிரதி. மகாலட்சுமியாக பெண்கள் வாழ ஆதாரம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக நெற்றிக்கு ஏன் பொட்டு தேவை தந்துஎமதுசக்திவிரயமாவதைதடுக்கின்றது. இதனால்தான் பொட்டு முக்கியத்துவம் பெறுகின்றது.

அது மட்டுமின்றி எமது வீடுகளில் உள்ள பெரியவர்கள் கூறுவது தீய எண்ணங்கள் எம் மனங்களில் எழாமல் பாதுகாக்கின்றது. தீய சக்திகள் பெண்களை அணுகாமல் பாதுகாக்கின்றது என்று. இவர்களின் இந்த கருத்துக்கள் உண்மை பொய்க்கு அப்பால் ஒரு பெண்ணிற்கு பொட்டு அவசியம் என்பது நமது மரபு.

பெண்கள் வெளியில் செல்லும் பொட்டு வைச்சா இப்ப ஸ்ரைல் இல்லை' என்று விட்டு தலையை சிலிப்பி விட்டு போவார்கள் பல ஹீரோயின்கள். சிலர் இந்த மனிசிக்கு வேலையில்ல என்று புறுபுறுத்து விட்டு, எது மிக மிக சின்னதோ அதை ஒட்டி கொண்டு செல்வார்கள்.

ஆனால் பெரியவர்கள் சொல்வதில் ஏதோ ஒரு நியாயம் இருக்கும். பெண்களை தவறான பார்வையில் பார்ப்பவர்கள் கண்களில் இருந்து விடை கொடுப்பதும். மற்றவர்கள் மத்தியில் ஒரு பெண்ணின்

நெற்றியில் பொட்டு எதற்கு?



யென்பதற்கு விளக்கம் இது.

எமது இரு புருவங்களுக்கு இடையிலும் நெற்றிப் பொட்டு என்ற சொல்வோம். மருத்துவ விளக்கப்படி நினைவாற்றல், சிந்திக்கும் திறன் என்பவற்றிற்கு உரிய இடம் இது. யோகா இதனை ஆக்ஞா சக்கரம் என்று சொல்கின்றது. விஞ்ஞானம் சொல்கின்றது நெற்றிப் பொட்டு மின்காந்த அலையை வெளிப்படுத்தும் என்று. எமக்கு தலையிடி வரும் போதோ நாம் கவலையில் வாடும் போதோ நெற்றிப் பொட்டு குளிர்ச்சியை பொழுது பொட்டு வைக்காமல் போனால் வீட்டில் உள்ள வயதானவர்களோ,அயல்வீட்டுபாட்டியோ சொல்வார் 'பொட்டு வைச்சிட்டு போ பிள்ளை. இப்படி விறுமசத்தி போல போகாத' என்று. இளம் பெண்கள் என்றால் 'அப்பா இல்லாததை போல போகாத' என்பர். திருமணமானவள் என்றால் 'கணவன் இல்லாததை போல போகாத' என்பர். இந்த வார்ததைகளை கேட்டாலே கான்ட் ஆயிடுவார்கள் தற்கால பெண்கள். 'நீ 90. உனக்கு என்ன தெரியும். சும்மா அலட்டாதே. நன்மதிப்பை ஏற்படுத்தி கொடுப்பதிலும் பொட்டிற்கு முக்கிய பங்கிருக்கிறது என்பது நமது முன்னோர்களின் நம்பிக்கை.

ஆனால் எது எப்படி என்றாலும் ஆன்மீக, விஞ்ஞான, மரபு என்று எல்லாமே ஒரு பெண்ணிற்கு பொட்டு முக்கியம் என்பதையே வலியுறுத்துகிறது. அது பெண்ணிற்கே உரிய அடையாளம். எனவே தமிழ் பெண்கள் என்ற ரீதியில் பொட்டை சிதறாமல் பொத்துவது ஒவ்வொரு பெண்ணின் கைகளிலும் உள்ளது.

மாதவிடாய் காலத்து வலி



Dr.M.தக்ஷாயினி
Amoh- nallur



மாதவிடாய் காலத்து வலியானது அனேக பெண்களின் பிரச்சனைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. மிகப் பிரதானமான இளம் பெண்கள் பருவமடைந்தது முதல், முதல் 5 வருடங்களுக்குள் இவ்வாறான பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். பொதுவாக மாதவிடாய் காலத்து வலியானது வயது செல்லச் செல்ல குறைவடைந்து செல்கின்றது.

மாதவிடாய் காலத்து வலியை நாம் 2 பிரிவாக வகைப்படுத்தலாம்.

1 ஒன்று உடலில் இனங் காணப்படாது மறைந்திருக்கும் காரணிகளால் (underlying cause) ஏற்படும் வலி.
2 உடற் தொழிலியல் ரீதியாக ஏற்படும் வலி.

உடலில் இனங்காணப்படாது மறைந்திருக்கும் காரணிகளால் ஏற்படும் வலியானது, என்டோமற்றியோசிஸ் (endometriosis), இடுப்பு குழியில் ஏற்படும் தொற்று (PID), கருப்பை கட்டிகள் (fibroias), பிறக்கும் போதே ஏற்படும் சில குறைபாடுகள் (congenital abnormalityô) என்பவற்றாலும் ஏற்படுகின்றது.

எனினும் மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வலியில் பெரும்பான்மையானவர்கள் பாதிக்கப் படுவது உடற் தொழிலியல் ரீதியாக ஏற்படும் மாற்றங்களினால் உண்டான வலியினால் ஆகும். ஆகவே நாம் பிரதானமாக உடற் தொழிலியல் மாற்றங்களினால் ஏற்படும் நோயைப் பற்றிப் பார்ப்போம்.

இவ் வலியானது பிரதானமாக மாதவிடாய் சக்கரத்தில் ஏற்படும் மாற்றங்களின் போது கருப்பை உட்புறத்தில் செறிவடையும் புரஸ்ரோக்கிளான்டின் (prostoglanudin) எனப்படும் இரசாயன பதார்த்தங்களினால் ஏற்படுகின்றது. இவ்வாறு செறிவடையும் போது கருப்பை தசைகள் சுருங்கி விரிகின்றன. இதனால் கருப்பை தசைக்கானுக்குச் செல்லும் இரத்த ஓட்டம் குறைவடைந்து, கிடைக்கும் ஒட்சிசனின் அளவும் குறைவடைகின்றது. இதனால் வலியுடன் கூடிய அசௌகரியம் உணரப்படுகின்றது. அத்துடன் புரஸ்ரோகிளான்டின் (prostoglanudin) மாதவிடாய் நேரத்தில் ஏற்படும் சத்தி, வயிற்றோட்டம் என்பவற்றிற்கும் காரணமாய் அமைகின்றது. இதைவிட ஒருவரின் மனோரீதியிலான காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன. இவ்வாறான காரணிகளால் ஒருவருக்கு ஒருவர் வலியுணர்வு வேறுபடுகின்றது.

உடற் தொழிலியல் ரீதியாக ஏற்படும் மாதவிடாய் காலத்து வலியின் போது பின்வரும் அறிகுறிகள் ஏற்படுகின்றன.

- அடிவயிற்றில் பிசைவது போன்ற வலி பொதுவான பரப்பென்பிற்கு மேற்பகுதியில் ஏற்படும். சில நேரங்களில் நாரி, தொடை, பகுதிகளிலும் வலியுணர்வு ஏற்படும்.
- வலியானது மாதவிடாய் காலத்து இரத்த போக்கிற்கு சில நாட்கள் அல்லது சில மணி நேரங்கள் முன்பாக ஏற்படுகின்றது.
- இது படிப்படியாக ஒன்று தொடக்கம் மூன்று நாட்களில் குறைவடைந்து சென்றுவிடும்.
- சத்தி, வயிற்றோட்டம், தலைச் சுற்று, தலையிடி, களைப்பு, காய்ச்சல் போன்ற உணர்வு போன்றவையும், சிலரிற்கு ஏற்படும்.

இவ்வாறான நிலையை தடுப்பதற்கு பின்வரும் முறையை கடைப்பிடிக்கலாம்.

- மாதவிடாய் அறிகுறிகள் ஏற்படும் போது சாதாரண வலி நிவாரணி (paracetamol) உட்கொள்ளல்.
- மாதவிடாயின் போது அடி வயிற்றில் சுடுநீர் கொண்ட போத்தல் (hot water bottle), சுடுபந்தணம் (heating pad) மூலம் ஒத்தடம் கொடுத்தல்.

இவை தவிர,

- உடற் பயிற்சிகள் மேற்கொள்ளுதல்
- யோகாசனப் பயிற்சிகளை மேற் கொள்ளல்.

மேலும் நண்பர்கள், குடும்பத்தவர்களின் ஆதரவும், உள ரீதியான வலிமையை பெறுவதற்கும், இவ்வாறான மாதவிடாய் கால பிரச்சனைகளை மனத்திடத்துடன் எதிர்கொண்டு வலியில் இருந்து விடுவித்துக் கொள்வதற்கும் மேலும் உறுதுணையாக விளங்கும்.

மேற் குறிப்பிட்ட படி செயற்பட்டும் வலி குறையவில்லை என உணர்பவர்கள் பெண் நோயியல் நிபுணரின் ஆலோசனையை பெறுவதன் மூலம் ஸ்ரீரொயிட் அல்லாத வலி நிவாரணி, கருப்பை மாத்திரைகள் போன்ற பல்வேறு பட்ட சிகிச்சை முறைகளை பெற்றுக் கொள்ள முடியும்.



வடக்கின் வலசைப் பறவைகள்

நீரில்பூக்கும் வெளிநாட்டு பறவைகளின் அதிசய உலகம்

பறத்தலின் இரகசியம் 1



கணபதிப்பிள்ளை அசோகன்
Asokan 2301@gmail.com

வடபகுதியிலுள்ள களப்புக்கள் மற்றும் கடல்நீரேரிகளினோரமாக பிரயாணம் செய்வபவர்களிற்கு அருமையான காட்சிகளை காணமுடியும். மாரிகளத்தில் மட்டுமே இந்த காட்சிகளை காணமுடியும். ஆனையிறவு, முல்லைத்தீவை சூழ்ந்த பாலங்கள், கொக்கிளாய், நாயாறு, மன்னார்ப் பாலம், பூநகரி, பொல்லை, கைதடி, நாவற்குழி, பண்ணைப் பாலம், புங்குடுதீவுப்பாலம், மற்றும் பொன்னாலை ஆகிய பிரதேசங்களில் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதம் தொடக்கம் மார்ச் அல்லது ஏப்பிரல் வரை இந்தக் காட்சியைக் காணலாம்.

சிறியது தொடக்கம் நடுத்தர அளவிலான பறவைகள் மிகப் பெரிய பறவைக்கூட்டங்களாக நீர்ப் பரப்பிலும் அதனை அண்டியதான பிரதேசங்களிலும் பறந்தும், நீந்தியும் உணவைத் தேடிக்கொண்டும் இருக்கும்.

இந்தக் கட்டுரையாளர் தமது முதலாவது பல்கலைக்கழகப் பாடத்தினைக் கற்றுக் கொண்டிருந்த போது ஒவ்வொரு நாளும் பொல்லைப் பாலத்தை கடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அவரின் கண்ணுக்கு தெரியாத இந்த வலசைப் பறவைகள் அப்போது அவருக்கு அழகானவையாகவும், அறிவுப்பசிக்கு விருந்தாளியாகவும் விளங்கியது. இதற்குக் காரணம் முன்னர் அவரிடம் இல்லாத வலசைப் பறவைகள் பற்றிக் கிடைத்த தெளிவான அறிவூட்டலும், அனுபவப் பகிர்வுமே ஆகும். எனவே வலசைப் பறவைகள் பற்றிய இந்தக் கட்டுரைத் தொடரை வாசிப்பதன் ஊடாக வடபகுதியைச் சேர்ந்தவர்களும், இங்கு வந்து போகின்றவர்களும் மாரிகாலத்தில் இங்கு அதிகளவில் காணப்படும் (அனேகமாக ஏனைய இடங்களில் இந்த அளவு செரியலாகக் காணப்படுவது இல்லை) வலசைப் பறவைகளை அறிவுபூர்வமாக, உணர்வுபூர்வமாக அனுபவித்து நன்மை பெற வேண்டும் என்பதே இந்தக் கட்டுரையாளரினதும், தீபம் பத்திரிகை நிறுவனத்தினதும், ஆர்வமும், விருப்பமும் ஆகும்.

இந்தக் கட்டுரைத் தொடரில் வலசைப் பறவைகள் என்றால் என்ன? அவை எங்கிருந்து வருகின்றன? அவை எந்தப் பாதையால் வருகின்றன? ஏன் இலங்கையின் வடபகுதியில் மிக அதிகளவில் வந்து போகின்றன? இலங்கைக்கு எந்தெந்த இனப் பறவைகள் வெளிநாட்டில் இருந்து வந்து போகின்றன? அவற்றின் மாரிகால வாழிடங்களைப் பாதுகாப்பதற்கு வடபகுதியில் வாழ்கின்ற மக்களும், அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும், என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி விரிவாக ஆராய்வோம்.

வலசைப் பறவைகள் என்றால் என்ன?

தமிழில் பண்டைய இலக்கியங்களில் வலசைப் பறவை என்று குறிப்பிடப்பட்ட இந்த வகைப் பறவைகளை தற்போது சாதாரண, நாளாந்த பாவனையில் குடிபெயர் பறவைகள், வெளிநாட்டுப் பறவைகள் என்றும் குறிப்பிடப்படுகின்றனர்.

உண்மையில் இந்தப் பறவைகளின் குடிபெயர்தல் என்ற செயற்பாடு ஏனைய சாதாரண, நாளாந்த அவற்றின் இடப்பெயர்வில் இருந்து வேறுபடுகிறது. சாதாரணமாக பறவைகளோ அல்லது விலங்குகளோ உணவு, உடை, பாதுகாப்பு மற்றும் தமது இனப்பெருக்க வாழ்க்கைத்துணை ஆகியவற்றுள் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதையோ தேடி ஒவ்வொரு நாளும் அல்லது ஒரு சில வேளை ஓய்வு எடுத்து ஓய்வு எடுத்தே இடம்பெயரும்.

இங்கு அவர்களுடைய அசைவு (இடப்பெயர்வு) ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட திசையிலேயோ அல்லது வருடத்தில் குறிப்பிடப்பட்ட பருவகாலங்களில் மாத்திரம் நிகழ்வதாகவோ இருக்க மாட்டாது. எழுந்தமானமாக இருக்கும். வலசைப் பறவைகளின் குடிப்பெயர்வு வருடத்தில் குறிப்பிட்ட பருவகாலங்களில் நிகழும். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பாதைகளில் (அந்தப் பாதைகள் அவற்றின் மூதாதையர் காலத்தில் இருந்து மில்லியன் கணக்கான வருடங்களாக மாறாமல் இருக்கிறது என்பது இன்னும் மனிதனுக்கு புரியாத மர்மம் நிறைந்தது ஆகும்) போய் வருவதாகும். முழு உலகத்தினையும் எடுத்துக் கொண்டால் குடிபெயர் பறவைகள் வெவ்வேறு இனப்பெருக்க இடங்களையும், குளிர்கால இரைதேடும் தளங்களையும் கொண்டது.

இந்தக் கட்டுரை இலங்கையின் வடபகுதிக்கு வந்து போகும் வலசைப் பறவைகள் பற்றியே அதிகம் கூற இருப்பதனால் அது இலங்கைத்தீவுடன் தொடர்புடைய ஆசியன் குடிபெயர் பறவைப் பாதையுடன் சம்பந்தப்பட்ட பல விடயங்களை பற்றியே அதிக ஆழமாக உதாரணத்துடன் ஆராய உள்ளது. சந்தர்ப்பம் கிடைக்கும் போது ஏனைய குடிபெயர் பறவைப் பாதைகளுடன் தொடர்புடைய நாடுகள், பறவைகள், மாதங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றியும் விளக்கம் தரப்படும்.

இலங்கைக்கு எந்தப் பாதையால் வலசைப் பறவைகள் வருகின்றன?

இந்தக் கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிட்ட படி வலசைப் பறவைகள் தமது இனப்பெருக்க தாய்ப்பிரதேசங்களில் இருந்து ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு குறித்த பாதையிலேயே இலங்கைக்குள் உட்புகுகின்றன.

இலங்கையின் ஆசிய குடிபெயர் பறவைகள் பாதை என்ற பொதுப் பாதையில் குறிப்பாக மத்திய ஆசிய குடிபெயர் பறவைகள் பாதை என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதைகளினாலேயே வந்து போகின்றன. இந்தப் பறவைகள் இது வரையில் முன்னேற்றகரமான நவீன விஞ்ஞான முறைப்படி உறுதிப்படவில்லை. காலகாலமாக பறவைகள் அவதானத்தில் தனிப்பட்ட ஆர்வம் உள்ள கடல் மாலுமிகள் அவதானித்தவற்றை அடிப்படையாக வைத்தே உருவாக்கப்பட்டுள்ளன. கடந்த 30 வருட யுத்ததினால் இது சம்பந்தமான ஆய்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு சாத்தியகூறு குறைவாகையால் நாம் அயல் நாடான இந்தியாவுடன் ஒப்பிடும் போது பின் தங்கியே நிற்கிறோம்.

தற்போதைய சாதகமான சூழலில் பல ஆய்வுகளை செய்வதன் ஊடாக மிக அரிய தகவல்களைப் பெறலாம். ஏற்கனவே அனுமானத்தின் அடிப்படையில் பெறப்பட்ட தகவல்களை உறுதிப் படுத்தலாம். இதற்கான பல்வேறு முன் எடுப்புக்கள் செயற்படத தொடங்கியுள்ளது. இலங்கைக்கு பறவைகள் வந்து போகும் பாதையை ஆய்வாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

1. கிழக்கு பாதை
2. மேற்கு பாதை
3. அந்தமான் பாதை

கிழக்கு பாதை என்னும் போது இந்தியாவின் கிழக்கு கடற்கரையோரமாக வரும் பறவைகள் தொடர்ச்சியாக கரையோரமாக வந்து யாழ்ப்பாணத்துக்குள் உட்புகுகின்றன.

கிழக்கு பாதையால் வரும் பறவைகள் வட அரைக்கோள நாடுகளான சைபீரியா, கிழக்காசிய நாடுகளான மொங்கோலியா மற்றும் இந்தியாவின் வடக்கு மற்றும் வட கிழக்கு பிரதேசங்களில் இருந்து வருகின்றன. இவை இந்தியாவின் கிழக்கு கரையின் ஊடாக பறந்து வந்து இந்தியாவின் முனையில் வெளியேறி இலங்கைக்குள் யாழ்ப்பாண குடாநாட்டுக்குள் உட்புகுகின்றன.

மேற்கு பாதையாக வரும் பறவைகள் மேற்கு சைபீரியா, இமயமலைக்கு மேற்கு மற்றும் வட மேற்கு பிரதேசங்கள் மற்றும் தூர கிழக்காசிய நாடுகளின் வட அரைக்கோள நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலில் இருந்து வருகின்றன. இவை இந்துநதி பள்ளத்தாக்கின் ஊடாக பாகிஸ்தான் வழியாக இந்தியாவின் மேற்கு கரையை அடந்து, அதன் வழியாக குமரி முனையை அடைந்து, அங்கிருந்து பாக்கு நீரிணையைக் கடந்து, இலங்கையின் மேற்கு கரையில் வெவ்வேறு இடங்களில் உட்புகுகின்றன. இந்தப்பாதையில் வரும் பறவைகள் கௌதாரி முனையில் இருந்து களுத்துறை வரையுள்ள கடற்கரையோரங்களில் உட்புகுகின்றன. வெவ்வேறு பறவைகள் வெவ்வேறு இடத்தினை தேர்ந்தெடுக்கின்றன. இதற்கான விளக்கம் ஆய்வாளருக்கு இன்னும் கிடைக்க வில்லை.



மேற்கூறிய கிழக்குப் பாதை மற்றும் மேற்குப்பாதையின் ஊடாகவே இலங்கைக்கு வெளிநாடுகளில் இருந்து பெரும்பாலன பறவைகள் வருகின்றன.

மூன்றாவது பாதை இலங்கையின் கிழக்குக் கரையில் பறவைகள் உற்புகுவதற்கான பாதையை தருகின்றது. இவ் மூன்றுபாதை பற்றிய விபரிப்பை இக்கட்டுரையின் பிறிதொரு அத்தியாயத்தில் காண்போம்.

(அடுத்த வாரமும் பறக்கும்)


இழந்த உயிர்கள், இழந்த மாலைகள்:


ஈழக் கவிதைகளின் இருமொழித் தொகுப்பு

எம். பௌசர்

இலங்கையின் உள்நாட்டு யுத்த காலகட்டத்தின் பகைப்புலத்தின் அடியாக, தமிழில் எழுதப்பட்ட கவிதைகளின் தமிழ் வடிவமும் அதன் ஆங்கில மொழி பெயர்ப்புமாக இந்த நூல் இங்கிலாந்தில் சென்றவாரம் வெளிவந்துள்ளது.

எம்.ஏ. நுஃமான் 1977இல் எழுதிய "நேற்றைய மாலையும் இன்றைய காலையும்" தொடக்கம், 2015இல் தான் இறப்பதற்கு முன்னர் தமிழினி எழுதிய "ஒரு தேவதையின் கனவு" வரையான 32 கவிஞர்களின் 48 படைப்புகள் இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. விடுதலைப் போராட்டத்துடன் எழுந்த ஈழத்து





தமிழ்க் கவிதையையும் எதிர்ப்பு இலக்கியத்தையும் மையப்படுத்தி இதுவரை பதினைந்து இலக்கியத் தொகுப்புகள் ஆங்கில மொழி பெயர்ப்பில் வெளிவந்துள்ளன. இதில் ஒரு கவி ஆளுமையின் தொகுப்பு, மூன்று கவிஞர்களின் கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பு, பெண் கவிஞர்களின் கவிதைகளைக் கொண்ட தொகுப்பு, தமிழ்க் கவிஞர்களை மட்டும் உள்ளடக்கிய தொகுப்பு, ஈழத்து தமிழ் இலக்கியத்தில் பங்களிப்புச் செய்யும் பல தமிழ், முஸ்லிம் மற்றும் புலம்பெயர் படைப்பாளிகளின் கவிதைகளைக் கொண்ட தொகுப்பு, இனப்பிரச்சினை, யுத்தம், அதன் விளைவுகள் படைப்பினூடாக வெளிப்படும் அரசியல்ரீதியான தொகுப்புகள் (தமிழகப் படைப்பாளிகளையும் உள்ளடக்கியது) என இவற்றைப் பல்வகைப்படுத்த முடியும்.

கன்னடமொழியில் ஒரு தொகுதியும் சிங்கள மொழியில் நான்கு தொகுப்புகளும் மலையாளம், தெலுங்கு, பிரஞ்சு, அரபு, இந்தோனேசியம், ஸ்வீடிஷ், போன்ற மொழிகளில் பல கவிதைகளும் மொழிபெயர்ப்பில் வெளியாகியுள்ளன.

ஈழத்துத் தமிழ்க் கவிதைகளை அல்லது இலங்கை உள்நாட்டு யுத்தத்தின் விளைவுகளை, அதன் பாடுகளை, மக்களின் துயரினை ஆங்கிலமொழி வாசகரிடையே கொண்டுசென்று சேர்ப்பதிலும், நமது படைப்பாளிகளைத் தமிழ் மொழிகடந்தபரப்புக்குள் அறிமுகப்படுத்துவதிலும் இத்தொகுப்புகள் முக்கிய பணியைச் செய்திருக்கின்றன.

நானறிந்தவரை இப்பணியில் மறைந்த பேராசிரியர் செல்வா கனகநாயகம், லக்ஷ்மி ஹோம்ஸ்ரோம் ஆகியோர் அதிகம் பங்களித்துள்ளனர். இப்போது வெளிவந்துள்ள இத்தொகுப்பினையும் லக்ஷ்மி ஹோம்ஸ்ரோம் அவர்களே முன்நின்று மொழிபெயர்த்தும் தொகுத்துமுள்ளார். செல்வா கனகநாயகம் அவர்களின் மொழிபெயர்ப்பில் ஐந்து தொகுப்புகள் வந்துள்ளன. லக்ஷ்மி ஹோம்ஸ்ரோம் பங்களிப்பில் இத்தொகுதியையும் சேர்த்து நான்கு தொகுப்புகள் வந்துள்ளன. இதுவரை வெளியான தொகுப்புகளைத் தேடும்போது நமக்குப் பின்வரும் தகவல்கள் கிடைக்கின்றன.

1. M. NEMINATHAN. Tamil Eelam Literature edited by M. Neminathan (1996)

2. CHELVA KANAGANAYAKAM. Lutesong and Lament edited by Chelva Kanaganayakam (Nov. 2001)

3. Wilting Laughter: Three Tamil Poets (R. Cheran, V. I. S. Jayapalan & Puthuvai Ratnathurai) Edited by Chelva Kanaganayakam (October 2009)

4. You Cannot Turn Away by R. Cheran (Author), Chelva Kanaganayakam (Translator) (September 2011)

5. In Our Translated World edited by Chelva Kanaganayakam (January 2013)

6. Uprooting the Pumpkin: Selections from Sri Lankan Tamil Literature, 1950-2012 edited by Chelva Kanaganayakam

7. LAKSHMI HOLMSTRÖM. The Rapids of a Great River (The Penguin Book of Tamil Poetry) edited by L. Holmstorm, Subashree Krishnaswamy & K. Srilata (June 2009)

8. A Second Sunrise: Poems by Cheran - Edited and translated from the Tamil by Lakshmi Holmström and Sascha Ebeling (2012)

9. In a Time of Burning by Cheran (ARC Visible Poets) - Edited by Lakshmi Holmstrom (July 2013)

10. S.Sumathy Like Myth and Mother - A Political Autobiography in Poetry and Prose by Sumathy (2008)

11. Rajiva Wijesinha, Mirrored Images edited by Rajiva Wijesinha (National Book Trust, New Delhi, 2012)

12. Shyam Selvadurai Many Roads to Paradise: An Anthology of Sri Lankan Literature - Edited by Shyam Selvadurai (Penguin India, May 2014)



13. Kannan Muthukrishnan. Time Will Write a Song for You: Contemporary Tamil Writing from Sri Lanka - Edited by Kannan Muthukrishnan, Rebecca Whittington, D. Senthil Babu & David C. Buck (Penguin, India, December 2014)

14. So. Pathmanathan, Sri Lankan Tamil Poetry, Tamil short stories from Sri Lanka (S.Godage & Brothers, 2013),: Three Plays by Shanmugalingam

15. S.Rajasingam and A.J.Canagaratna: Devils & Demons - A Collection of Short Stories by Neervai Ponnaiyan

16. Halpé, Ashley; Nuhman, M.A.; Obeyesekere, Ranjini (Editors)- A Lankan mosaic.: Translations of Sinhala and Tamil short stories.:

LOST EVENINGS, LOST LIVES என்ற இத்தொகுப்பில் ஆழியாள், பா. அகிலன், அனார், கி.பி.அரவிந்தன், ஔவை, பாலசூரியன், சேரன், துஷ்யந்தன், ஃபஹீமா ஜஹான், வ.ஐ.ச. ஜெயபாலன், அ.யேசுராசா, எஸ்.கருணாகரன், குட்டி ரேவதி, கே. கனகலதா, மாலதி மைத்ரி, எம்.ஏ. நுஃமான், ஏ.எம். ரஷ்மி, ரவிக்குமார், எம். ரிஷான் ஷெரீப், அ.சங்கரி, ஸர்மிளா ஸெய்யித், சிவரமணி, சி.சிவசேகரம், சோலைக்கிளி, சுகிர்தராணி, தமிழினி, தீபச்செல்வன், தேவ அபிரா, திருமாவளவன், ஊர்வசி, கப்டன் வானதி, சு. வில்வரத்தினம் ஆகியோரின் 48 படைப்புகள் இடம் பெற்றுள்ளன. ஆங்கில மொழியில் வெளியான பல தொகுப்புகளுக்குப் பின்னூக்கியாக இருந்து படைப்புகளை நிரற்படுத்துவது, படைப்பாளிகளுடன் தொடர்பு கொள்வது, மொழி பெயர்ப்பாளர்களுக்கும் படைப்பாளிகளுக்குமிடையே உரையாடலை இணைப்பது போன்ற பணிகளை பத்மநாப ஐயர் தனது பங்களிப்பாக வழங்கி நிற்பது இங்கு பதியப்பட வேண்டியதாகிறது. லண்டனில் உள்ள ARC Publication இத்தொகுப்பைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. ஏற்கெனவே சேரனின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளின் இருமொழிப் பதிப்பை இன் நிறுவனம் வெளியிட்டிருந்தது. In a Time of Burning (எரிந்து கொண்டிருக்கும் நேரம்) என்னும் அத் தொகுப்புக்கு இங்கிலாந்தின் றிணிழி இலக்கிய நிறுவனம் விருதொன்றை வழங்கியிருந்தது.

இவ்வகையில் இப்பதிப்பகத்தின் இரண்டாவது தொகுப்பு இது. ஈழத் தமிழ் மொழிசார் இலக்கியம், பண்பாடு, அரசியல் தொடர்பில் இப்பதிப்பகத்தின் ஈடுபாடும் அக்கறையும் கவனம் கொள்ளத்தக்கவை.

இங்கிலாந்தில் கவிதை நூல்கள் வெளியிடுவதற்காக என இயங்கி வரும் ஒரேயொரு நிறுவனம் Arc வெளியீட்டகம்தான். உலகின் பல்வேறு மொழிகளிலும் வெளியாகும் அற்புதமான கவிதைகளையும் கவிஞர்களையும் தேர்ந்தெடுத்து இருமொழிப் பதிப்பாக வெளியிடும் அரிய பணிகளைக் கடந்த முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வருகின்றனர் கிஸிசி பதிப்பகத்தின் நிறுவனர்களான அஞ்சலா ஜார்மனும் ரோனி வார்ட்டும்.

ஜனவரி மாத இறுதியில் அல்லது பெப்ரவரி மாத முதல் வாரத்தில் இந்நூல் வெளியீட்டு நிகழ்வு லண்டனில் நடைபெறும். மேமாதம் யோர்க் பல்கலைக் கழகத் தமிழியல் மா நாட்டின் போது இந்த நூல் கனடாவில் வெளியிடப்படும். தமிழிலும் தமிழ் இலக்கியத்திலும் ஈடுபாடு உடைய அனைவரும் கலந்துகொண்டு இவ்வாறான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டுகிறோம்! நமது இளம் தலைமுறையினரிடம் பரவலாக இந்நூல் சென்றடைவது அவசியம்.

சிறு விளம்பரங்கள் Free classified

குளிர்கால ஒன்று கூடல்

நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா நடத்தும் குளிர்கால ஒன்றுகூடல். தை 2ஆம் நாள் 2016, பிற்பகல் 5:30 மணிக்கு 1160 Tappscott Road நடைபெறும். அனைத்து பழைய மாணவர்களையும் குடும்பத்தோடு அழைக்கிறோம். தொடர்புகளுக்கு: (416) 3169526, (905) 6191710, (613) 7473790. e-mail: ncosa.kks@gmail.com

வேலை வாய்ப்பு

இஸ்காபரோவில் அமைந்துள்ள அழகு நிலையம் ஒற்றில் முழு நேர மற்றும் பகுதி NeuEsthetician தேவை. நேரடியாக அல்லது மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கலாம். Surinder@artisanspa.ca. 115651. Steels ave E. Toronto, M1v5p6. Tel: 416. 755 7052

பொங்கல் விழா

மார்க்கம் தமிழ்ச் சங்கம் தமிழ் மரபுத் திங்களை முன்னிட்டு நடத்தும் பொங்கல் விழா.
இடம்: Cornell Community Centre, (3201 Bur Oak Ave, Markham, ON L6B 0T2) நாள்:வெள்ளிக்கிழமை சனவரி 8, 2016 நேரம்: 6:00 8:00 PM நுழைவுக்குக் கட்டணம் இல்லை. அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். தொடர்புகளுக்கு: 416.528.0372, 647.273.8096 மின்னஞ்சல்: markham.mto@gmail.com



சீஸ் புடிங்

குழந்தைகளை காலையில் அல்லது ஈற்றுணவாக விரும்பி உண்ண வைக்க கூடிய உணவு புடிங். அத்துடன் நிறை போசாக்குடையது. சாதாரணமாக நாம் கொடுக்கும் முட்டைஇ ரொட்டி, பாண் போன்றவற்றை தினமும் குழந்தைகள் உட்கொள்ள மாட்டார்கள். எனவே அவற்றை மாற்றி சத்து நிறைந்த உணவாக புடிங்கை கொடுக்கலாம்.

தேவையான பொருட்கள்:

உரொட்டித் தூள் : 2கப், சீஸ் துருவல் : 200g, வெண்ணெய் : 200g, பால் : 1 லீற்றர்,
உப்புத்தூள் : தேவையான அளவு, மிளகுதூள் : தேவையான அளவு, முந்திரி பருப்புத்தூள் : அரைக்கப்

செய்முறை:

1. பாத்திரம் ஒன்றில் பாலை ஊற்றி அடுப்பில் வைத்துக் கொதிக்க விடவும். நன்கு கொதிக்க தொடங்கியதும் பாதியளவு வெண்ணெய் போடவும் வெண்ணெய் நன்கு கரைந்ததும் அதில் ரொட்டித்தூளையும் முந்திரி பருப்பையும் கொட்டி நன்றாக கிளறி விடவும்.
2. வேறொரு பாத்திரத்தில் மீதமுள்ள வெண்ணெயை உருக்கி ஊற்றி அதில் சீஸ் துருவல் மிளகு தூள் உப்புத் தூள் ஆகியவற்றைப் போட்டு கலக்கவும் அதன் பின் பால் உரொட்டித்தூள் கலவையையும் அதில் சேர்த்து நன்றாக கிளறி கொள்ளவும்.
3. மற்றுமொரு பாத்திரத்தில் வெண்ணெய்தடவி அதில் அந்த கலவையை கொட்டி 350 பாகை வெப்பத்தில் 45 நிமிடம் பேக் செய்து கொள்ளவும். இன்றே செய்து கொடுங்கள் சுவையான புடிங்கை உங்கள் குழைந்தைகளுக்கு.

hello 2016
HAPPY NEW YEAR

வளமும் மகிழ்வும்
அமைதியும் உயர்வும்
புதிய ஆண்டில்
தங்கள் வாழ்விற் தொடர்ந்திட
வாழ்த்துகிறோம்!

2016





DEEPAM .news
தீபம்
கனடாப் பதிப்பு





இனப் படுகொலை

மறக்கப் பட்டதும் மறைக்கப் பட்டதுமான இனப்படுகொலைகளை ஆவணப் படுத்தல்

உலகளாவிய ரீதியில் நடந்த மறக்கப் பட்டதும் மறைக்கப்பட்டதுமான இனப்படு கொலைகளை ஆவணப்படுத்தும் முயற்சிகள் தொடர்ச்சியாகப் பல்வேறு மட்டங்களில் நடந்து வருகின்றன. அமெரிக்காவிலுள்ள 'தென் கலிபோர்னிய பல்கலைக் கழகத்தைத் தளமாகக் கொண்ட யு.எஸ்.சீ ஷோவா என்ற புகழ்பெற்ற நிறுவனம் இவ்வாறான ஆவணப் படுத்தலை தொடர்ந்து செய்து வருகிறது. ஹிட்லரின் நாஜிப் படைகளின் இன அழித் தொழிப்பு, ஆர்மீனிய இன அழித்தொழிப்பு போன்ற பல மறக்கப்பட்ட அழித் தொழிப்புக்களை ஆவணப் படுத்திய இந்த நிறுவனம் தற்போது குவாத்தமாலாவின் நடந்த இனப்ப படுகொலைகள் தொடர்பான ஆவணங்களைத் திரட்டி வருகிறது.

உலகெங்கும் ஆட்சியாளர்கள் தமது நலன் களுக்கு எதிரானவர்கள் என்று கருதுவோரை திட்டமிட்டவகையில் இன ரீதியாகவோ மத ரீதியாகவோ அழித்தொழிக்கும் நடவடிக் கைகளில் ஈடுபட்டுவருவது இன்றெல்லாம் புதுமையானவையோ அதிர்ச்சியூட்டுப வையோ அல்லாமல் போய்விட்டது. இலங்கையில் தமிழினத்துக்கு எதிராக நடந்த இனப்படுகொலை தொடர்பாக தொடர்ச் சியாக அரசியல் ஆய்வாளர்களும் ஊடகவி யலாளர்களும் எவ்வளவோ தகவல்களை திரட்டித் தந்துள்ளனர். ஆயினும், நடை பெற்றது வெறுமனே போர்க்குற்றம் மட்டுமே, அவை இனப் படுகொலை அல்ல என்ற அடிப்படையிலே அந்த விடயத்தைப் பற்றி விசாரிக்கலாம் என்று பல சட்ட அறிஞர்கள் கூட விவாதித்து வருகிறார்கள். ஆயினும் ஆர்மேனிய முதல் சூடான் குவாட்டமாலா வரையான நாடுகளின் சமூக அரசியல் செயற்பாட்டாளர்களும் ஊடகவியலாளர்களும் சற்றும் சளைக்காமல் அவற்றை இனப்படுகொலைகளே என்று நிரூபிப்பதற்கான ஆவணங்களை தொடர்ந்து திரட்டி வருகிறார்கள்.

கம்யூனிஸ்ட் சதிப்புரட்சியில் ஈடுபடத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்று காரணம் காட்டி, திட்டமிட்டபடி அங்குள்ள மாயன் இந்தியர்களை (Mayaachi), குவாட்ட மாலா இராணுவமும் அதன் இன்னொரு அணியான, தம்மை 'கொலை இயந்தி ரங்கள்' என்று அழைக்கும் கிளர்ச்சி அடக்கும் படையணியும் படுகொலை செய்தது நாடறிந்த உண்மை. இரண்டு ஆண்டுகளிக்கு மேல் நடந்த 'இரகசிய அழித்தொழிப்பு' என்று பரவலாக அறியப்பட்ட அவர்களது படுகொலைகளும் சொத்து அழிப்புக்களும் கொஞ்ச நஞ்சமல்ல. றியோ நீக்ரோ என்ற கிராமத்தில் மட்டும் 440 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இது 'றியோ நீக்ரோ படுகொலை' (Río Negro massacres). என பரவலாக அறியப்பட்ட ஒன்றாக இருந்து வருகிறது. இது தொடர்பாக வெளியான ஐநா அறிக்கையின்படி அறுநூறுக்கு மேலான கிராமங்கள் தாக்கப் பட்டன. குழந்தைகள் சுவர்களில் எறி ந்து கொல்லப்பட்டார்கள். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப் பட்டுக் கொல்லப் பட்டார்கள். ஆண்கள் தேடித்தேடிப் பிடிக்கப் பட்டுக் கொல்லப் பட்டார்கள். இந்த இன அழித் தொழிப்பு நடைபெற்ற காலம் முழுவதும், தொடர்ச்சியாக அமெரிக்கா, குவாட்டமாலா அரசுக்கு ஆயுதங்களை விநியோகித்து வந்தது. அதன் இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்து வந்தது. அவர்களில் சிலருக்கு சீ.ஐ.ஏ தனது ஊழியர்களைப் போல ஊதியமும் வழங்கி வந்தது. ஆனாலும் இவற்றை உலக அரங்கில் இனப்படுகொலை என்று அங்கீகரிக்க சர்வதேச அரசுகள் இன்னமும் மறுத்து வருகின்றன.

ஆயினும் அங்குள்ள மக்கள் சளைத்துவிட வில்லை. அவர்கள் தொடர்ச்சியாக இவற்றை ஆவணப்படுத்தி வருகிறார்கள். தப்பிப் பிழைத்தவர்களிடமிருந்து தகவல்களையும் ஆதாரங்களையும் தொடர்ந்து திரட்டி வருகிறார்கள். அமெரிக்க இயக்குனர் ஸ்ரிபன் ஸ்பிள்பெர்க் அவர்ளால் ஸ்தாபிக்கப் பட்ட யு.எஸ். சீ ஷோவா (USC Shoah Foundation) என்ற நிறுவனம் நடாத்திவரும் இது தொடர் பான ஆவணப்படுத்தல் நிகழ்வுகள் பெரும் பாலும் முடிவுக்கு வந்துள்ள நிலையில் அண்மையில் இவை பற்றிய தகவல்கல் தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்த படுகொலைகள் நடந்து முப்பதுக்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குப் பின்னும் இவை பற்றிய தகவல்களைத் திரட்டுவதில் அவர்கள் அக்கறையாகவும் விழிப்பாகவும் உள்ளனர். நூற்றுக்கு மேற்பட்ட நேரடி ஆவணங்களையும் நானூறுக்கு மேற்பட்ட பிற ஆதாரங்களையும் இதுவரை அவர்கள் ஆவணப்படுத்தியுள்ளனர். அவர்களது விசாரணையின் போது அண்மையில் சாட்சியமளித்த ஒருவரது சாட்சியம் முழு உலகையும் குலுக்கும் அளவுக்குப் ஊடகங்களின் மூலம் பரவலாகிவிட்டுள்ளது. இது அவர்களின் இந்த விசாரணையின் முதலாவது வெற்றி எனலாம்,

ஆனால் இலங்கையில் நடந்த இனப்படு கொலை தொடர்பாக இதை விட மூன்று மடங்கான ஆதாரங்களும் ஆவணங்களும் திரட்டப்பட்டு ஐ.நா. வில் சமர்ப்பிக்கப் பட்டிருந்த போதும் இவை பற்றிய விபரங்கள் உலக அளவில் இன்னமும் இந்த அளவுக்குப் பரவலாகவில்லை. தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட இனப்படுகொலை வெறும் போர்க்குற்றம் என்ற அளவிலேயே பேசப்படு கிறது. உண்மையில் உலகளாவிய அளவில் எமக்கு நடந்த அநீதி பரவலாக அறியப்பட வேண்டுமானால் நாம் இதுவரை செய்த ஆவணப்படுத்தல்கள் போதுமானவை அல்ல. இலங்கையில் நடந்த இன அழித்தொழிப்பு தொடர்பான சரியானதும் விபரமானதுமான ஆவணத்திரட்டலை முறையான நிபுணத்துவ உதவியுடன் மேற்கொள்வதில் நாம் அக்கறை யாக இருக்க வேண்டும். இவ்வாறான பல்கலை கழகங்களின் பின்னணியில் உள்ள, ஆற்றலும் அனுபவமும் சக்தியும் வாய்ந்த தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட நிறுவனங்களின் உதவியை நாம் நாட வேண்டும். புலம்பெயர் தமிழ் சமூகம் இது பற்றி அக்கறைகொண்டு செயற்பட வேண்டும். அவர்களால் மட்டுமே இதை சாத்தியமாக்க முடியும்.